# கட்டுப்பாடு காப்பீர்!

## இளைஞர்களுக்கு அமிர்தலிங்கம் விசேட வேண்டுகோள்!

இளைஞர்கள் கடமை, கண்ணியம், கட்டுப்பாட்டுடன் இயங்கவேண்டுமென்றும், எந்தக் கட்டத்திலும் உணர்ச்சி வசப்பட்டு கட்டுப்பாட்டை மீறக்கூடாதென்றும், பொதுமக்களுக்கு இயக்கத்தின் மீது வெறுப்பு ஏற்படுகிற முறையில் எவ்வித நடவடிக்கையிலும் ஈடுபடக்கூடாதெனவும் பொலிஸ் காவலிலிருந்தபடியே தமிழர் விடுதலைக் கூட்டணிசெயலாளர் நாயகம் நாவலர் அமிர்தலிங்கம் தமிழ் இளைஞர்களுக்கு சுதந்திரன் மூலம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

நாமும் ஏனைய கூட்டணி பா. உ.க்களும் கைதுசெய்யப்பட்ட பின்னர், உணர்ச்சி வசப்பட்ட இளைஞர்கள் சிலர் பொது மக்களுக்கு இடைஞ்சல் ஏற்படுத்துகிற விதத்தில் நடந்துகொண்டதாகக்கேள்விப்பட்டு மனம் வருந்திய திரு. அமிர்தலிங்கம், சுதந்திரன் ஆசிரியரை விசேடமாக வரவழைத்து மேற்கண்ட தமது வேண்டுகோளை வெளியிடும்படி அவரிடம் கேட்டுக்கொண்டார்.

கட்டுப்பாட்டைக்கடைப்பிடிக்கவேண்டிய நெருக்கடியான நேரத்தில் நாமிருக்கிறோம்; கட்டுப்பாடு குலைதல் இயக்கத்துக்கு தீமையையே விளைவிக்கும். உணர்ச்சிவசப்பட்டு கட்டுப்பாடு மீறாது, நமது இளைஞர்கள் கட்டுப்பாட்டுடன் இருந்திடவேண்டும்; பொதுமக்களுக்குஇடைஞ்சல் உண்டாக்கக் கூடிய

—5-ம் பக்கம் பார்க்க

சுதந்திரன்
SUTANTIRAN

விலை சதம் 60. தொலை பேசி : 23411 நிறுவியது: 1947.

வள்ளுவர் ஆண்டு 2007 வைகாசி—17, ஐ.அவ்வல்—29 (30 5-76) ஞாயிறு புத்தகம் 30, இதழ் 11

# ஜூன் 5 - மீண்டும் சட்டமறுப்பு!

## தமிழர் விடுதலைக் கூட்டணி செயல் அதிபர் 'சிவா' அறிவிப்பு!

தமிழர் விடுதலைக் கூட்டணிதனது அடுத்த சட்டமறுப்பு போராட்டத்தை தியாகி சிவகுமாரன் நினைவு நாளான எதிர்வரும் ஆனி ஐந்தாம் திகதி சனிக்கிழமை யாழ்ப்பாணத்தில் மீண்டும் நடத்தத் திட்டமிட்டிருப்பதாக கூட்டணியின் இணைச் செயலதிபர்களில் ஒருவரான திரு. மு.சிவசிதம்பரம் சுதந்திரனுக்குத் தெரிவித்தார்.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் கீழ் ஒன்று பட்டிருக்கும் தமிழ்தேசிய இனத்தை பிளவுபடுத்தும் வகையிலும் தமிழ் மக்களில் ஒரு பிரிவினை மட்டுமே இந்த இயக்கத்தை நடத்துவதாக உலகுக்கு காட்டும் திட்டத்துடனும்—தமிழரசுக்கட்சி மட்டுமே இந்த இயக்கத்தை நடத்துவதாக அண்மையில் பிரதமர் கூறியிருந்த கருத்துக்குப் பதிலடிகொடுக்கும் வகையில் இந்தச் சட்ட மறுப்பு இயக்கம் அமையும் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

தமிழர் விடுதலைக் கூட்டணியில் அங்கம் வகிக்கும் தமிழ் காங்கிரஸ் பிரமுகர்களே முழுக்க முழுக்க இந்தச் சட்ட மறுப்பில் ஈடுபடுவார்கள்; தமிழ் காங்கிரசும் இணைந்துதான்வட்டுக்கோட்டைத் தீர்மானத்தை எடுத்தோம் — சட்டமறுப்பிலும் ஈடுபடுகிறோம் என்பதை இதன் மூலம் அம்மையாருக்கு எடுத்துக்காட்டவிருக்கிறோம் என்றும் திரு. சிவசிதம்பரம் மேலும் தெரிவித்தார்.

இச்சட்ட மறுப்பிலே தாமும், வவுனியா முன்னாள் பா. உ. தா. சிவசிதம்பரம், கிளிநொச்சி பா. உ. வி. ஆனந்தசங்கரி ஆகியோரும் இன்னும் சிலரும் பங்கு பற்றுவார்கள் என்று அவர் மேலும் அறிவித்தார்.

—5 ம் பக்கம் பார்க்க



தமிழர் தளபதி அமிர்



கடமை வீரர் நவம்



கர்ம வீரர் துரை



செந்தமிழ் செல்வர் பண்டிதர்இரத்தினம்

பொலிஸ் காவலில் இன்றுடன் 9வது நாள்!


## கொழும்பு கொம்பனிதெரு தடுப்புமுகாமில் தமிழர் மீது தாக்குதல்!

25-5-76 காலையில் கொழும்பு கொம்பனித்தெருவிலுள்ள சட்டவிரோத குடியேற்றக் காரர்களின் தடுப்புமுகாமில் அங்குள்ள இனவெறி பிடித்த சிங்கள அதிகாரிகள் அங்கு அடைத்துவைக்கப்பட்டிருக்கும் 6 இந்தியத் தமிழர்களை மனிதாபிமானமற்ற முறையில் மிலேச்சத்தனமாகத் தாக்கியது சம்பந்தமாக உடன் நடவடிக்கை யெடுக்கும்படி குடிவரவு குடியகல்வு திணைக்கள ஆணையாளரையும், பிரதமரையும் இ.தொ. கழகத் தலைவரும் மூதூர் பா.உ.வுமான திரு அ. தங்கத்துரை வேண்டியுள்ளார். இத்தகைய வெறிப்போக்கை தடுத்து திருத்தும்படியும் அவர் கோரியிருக்கிறார்.

## "புலிவாலைப் பிடித்த நிலையில் ஆட்சியாளர் அவதி!"

தமிழர் விடுதலைக்கூட்டணியின்செயலாளர் நாயகம் நண்பன் அமிர்தலிங்கம் அவர்களையும், மற்றும் கூட்டணி பா. உ.க்கள் மூவரையும் கைது செய்ததன் மூலம் புலிவாலைப் பிடித்தவனின் நிலையில் அரசு அவதிப்படுகிறது! இவர்கள் நால்வரையும் விடுதலை செய்தாலும் எங்கள் இயக்கத்துக்கு வெற்றி தான்! சட்ட நடவடிக்கையெடுத்து சிறைக்கனுப்பினாலும் எங்களுக்கு வெற்றிதான்!

—கொழும்பில்தந்தை செல்வாவின் இல்லத்தில் 26-5-76ல் நடைபெற்ற கருத்தரங்கில் உடுப்பிட்டி சிவா கூறியது.




தமிழ் ஈழத்தேசிய இனத்தின் விடுதலைக் குரல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன விடுதலையை வேண்டி இணைந்துள்ள தமிழினத்தை கூறுபோடும் தந்திரத்துக்கு பலியாகமாட்டோம்!''



''தமிழர் விடுதலைக் கூட்டணியின் கோரிக்கையை வடக்கு, கிழக்கு மாகாணத் தமிழ் மக்கள் கடுமையாக எதிர்த்து நிற்கிருர்கள்'' என்றும் கூறியிருக்கிறீர்கள். காங்கேசன்துறை இடைத் தேர்தலின்போது படித்த பாடம் உங்களுக்கு அதற்குள்ளாகவா மறந்துவிட்டது? இது விஷயத்தில் வெகுஜனக் கருத்தையறிவதற்கு எந்த விதமான ஏற்கக்கூடிய முறையையும் நாம் சந்திக்கவும், அதன் தீர்ப்பை ஏற்கவும் தயாராக இருக்கிறோம்'

கட்சி அரசியல் வேறுபாடுகளின்றி விடுதலையொன்றையே குறிக்கோளாக வைத்து தமிழர் விடுதலைக்கூட்டணியாக ஒன்றுபட்டு இயங்கும் தமிழ் இனத்தை மீண்டும் பிரிக்கும் எந்த முயற்சிக்கும் தமிழ் மக்கள் பலியாகமாட்டார்கள் என்று பிரதமருக்கு எழுதியுள்ள கடிதமொன்றில் அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் பொதுச்செயலாளரும் தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயல் அதிபர்களில் ஒருவருமான திரு. மு. சிவசிதம்பரம் குறிப்பிட்டுள்ளார்.

அவர் தமது கடிதத்தில் கூறியிருப்பதாவது:-

அன்புள்ள பிரதமருக்கு,

தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் என்ற முறையிலும் அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சியின் பொதுச்செயலாளர் என்ற முறையிலும் இந்தக் கடிதத்தை நான் உங்களுக்கு எழுதுகிறேன்.

''தமிழரசுக்கட்சியே போராடிவருவதாகவும்,'தமிழரசுக் கட்சி பா. உக்களே ''நாசகாரத் துண்டுப்பிரசுரங்களை'' விநியோகிப்பதில் ஈடுபட்டிருந்ததாகவும் நீங்கள் பேசியதாக 24.5 76 டெயிலி நியூஸ் பத்திரிகையில் ஒரு செய்தி பிரசுரிக்கப்பட்டிருந்தது. உங்கள் இந்த இரண்டு கருத்துக்களுமே உண்மைக்குப் புறம்பானவை.

வட்டுக்கோட்டையில் 1976 மே 14,15ம் திகதிகளில் நடைபெற்ற தமிழர் விடுதலைக் கூட்டணியின் முதலாவது தேசிய மாநாட்டின் போது பிரதிநிதிகள்மாநாட்டிலேதான் தமிழ் தேசிய இனத்தின் ஆட்சியுரிமை பற்றிய அரசியல் பிரகடனம் நிறைவேற்றப்பட்டது. இந்த அரசியல் பிரகடனம், 50,000க்கு மேற்பட்ட மக்கள் திரண்ட பொதுக்கூட்டத்தில் அங்கீகரிக்கப்பட்டது. எனவே இந்தக் கோரிக்கை தனி ஒரு அரசியற்கட்சியின் கோரிக்கையல்ல — தமிழர் விடுதலைக் கூட்டணியின் ஒன்றுபட்ட கோரிக்கையாகும். உங்கள் கட்சி எப்படி சிங்கள மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்துகிறதோ அதே போலவே, தமிழர் விடுதலைக் கூட்டணியும் இலங்கை வாழ் தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவப படுத்துகிறது.

துண்டுப் பிரசுரங்களை சட்டத்தை மீறி விநியோகிப்பது என்று முடிவு எடுத்ததும் தமிழர் விடுதலைக் கூட்டணியின் நடவடிக்கைக் குழுவே என்பதை உங்கள் கவனத்துக்கு கொண்டு வர

## பிரதமருக்கு உடுப்பிட்டி சிவா எழுதிய சூடான கடிதம்!

விரும்புகிறேன். தமிழரசுக் கட்சியை மட்டும் நீங்கள் தனியே பிரித்துக் காட்டுவதன் மூலம் தமிழர்களின் ஒன்றுபட்ட விடுதலைக்கோரிக்கையும் ஜனநாயகத்துக்கு முரண்பட்டதும் நீதியற்றதுமான அவசரகால சட்டவிதிகளை மீறுவதென்று எடுத்தமுடிவும்—தமிழ் மக்களில் ஒரு பிரிவினரே இவற்றை செய்கிருர்கள் என்று ஓர் அபிப்பிராயத்தை உண்டாக்கவே முயற்சிக்கிறீர்கள்.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் 21-5-76 இலும் 24-5-76 இலும் வெற்றிகரமாக நடைபெற்ற பூரண ஹர்த்தால், தமிழர் விடுதலைக் கூட்டணியின் பின்னல் தமிழினம் அணிவகுத்து நிற்கிறது என்பதை துலாம்பரமாக எடுத்துக்காட்டி விட்டது.

இந்தச்சோதனையால் ஏதாவது பயன் ஏற்படவேண்டுமென்ருல் —நீங்களும் மக்கள் அளிக்கும் அந்தத் தீர்ப்புக்கு கட்டுப்பட தயாராக இருக்கவேண்டும்.

தமிழர் விடுதலைக்கூட்டணியின் இயக்கம் சமூக விரோதமானதென்றும் நாசகார நடவடிக்கையென்றும் கூறியிருக்கிறீர்கள். விடுதலை இயக்கங்களை எல்லா காலனி ஏகாதிபத்திய எஜமானர்களும் இப்படித்தான் வர்ணித்திருக்கின்ருர்கள். ஆனல் வரலாறு தந்த தீர்ப்பு வேறு விதமாகவே அமைந்திருக்கிறது:

இந்த இயக்கத்திலீடுபடுபவர்களுக்கு எதிராக கடும் நடவடிக்கையெடுக்கப் போவதாகவும் மேலும் நீங்கள் கூறியிருக்கிறீர்கள், எங்கள் இயக்கம் சாத்வீகத்தை அடிப்படையாகக் கொண்ட சட்டமறுப்பு, ஒத்துழையாமை இயக்கம். காந்திஜியின் போதனைகளுக்கமைய —நீங்கள் எவ்வளவு கடுமையான நடவடிக்கையெடுத்தாலும், அவற்றையெல்லாம் அனுபவிக்கவும் துன்பப்படவும் நாங்கள் தயாராகவேயிருக்கிறோம். தியாகமே இறுதியில் வெற்றி பெற்றதாகவும் வரலாறு கூறுகிறது.''

# முற்போக்கு எழுத்தாளர் இருவர் எமக்குக் காட்டும் சீனவும்-ரஷ்யாவும்

'தினகரன்' பத்திரிகையில் டாக்டர் இந்திரகுமார், ரஷ்யா நாட்டிற்குச் சென்றுவிட்டு 'இந்திரலோகம் கண்டேன்' என்று பயணக்கட்டுரைகளை வாரந்தோறும் தருகிருர். சீன நாட்டைப்பற்றியும் அதன் அரசியல் மாற்றங்கள் பற்றியும் அவசி ஈழத்தம்பி, அடிக்கடி எழுதிக்கொண்டிருக்கிருர், எவ்வித இடைஞ்சலுமின்றி இந்நாடுகளில், மக்கள் வாழ்வு மலர்ந்துள்ளதாக இவர்கள் தரும் விபரங்கள் எத்துணையளவு சரியானவை என்பதைச் சற்று ஆராய்வோம்.

முதலில் இந்திரகுமார் காட்டும் 'இந்திரலோகத்தைச்'சற்றே நோக்குவோம். சோவியத் அரசின் விருந்தாளியாகச் சென்று, அந்நாட்டு அரசின் செலவில் யாவற்றையும் அனுபவித்துவிட்டு, 'எல்லாம இன்பமயம்'' என்று துதி பாடுகிருர் குமாரப்பருவ டாக்குத்தர். ஒரு நாட்டின் அரச விருந்தாளியாகச் செல்லும் ஒருவருக்குக்கிடைக்கும் சுகபோகங்கள், மொழிபெயர்ப்பாளர் உதவி, போன்றவை சாதாரண பிரஜையாக அதே நாட்டிற்குச் செல்பவருக்கு கிடைக்குமா? நிச்சயமாக இல்லை. இதைப் புரிந்துகொள்ளாமல், இந்திரகுமார் இந்நாட்டுத் தமிழ் வாசகர்களுக்கு ரஷ்யாவிலே தான் அனுபவித்த யாவற்றையும் எழுதித் தந்து, அந்நாட்டை 'இந்திரபுரி'யாகக் காட்டுவது எங்களை மடையர்களாக்குவதாகும்.

நாங்களும் சோவியத்நாட்டைப்பற்றி, மற்ற எழுத்தாளர்களின் படைப்புக்களிலிருந்தும் அறிந்துள்ளோம், அதிகம் போவானேன்? சோவியத் நாட்டிலேயே பிறந்து, அந்நாட்டில் மக்களுக்கு வழங்கப்பட்டுள்ள 'சுதந்திரங்களை' அச்சிற் கொண்வந்ததற்காக அரசினரால் தண்டிக்கப்பட்டும், முழு அதிகாரத்திற்கும் எதிராக தனியொருவனக நின்று போராடி இலக்கியத்துறைக்கான நோபல் பரிசைப் பெற்ற சோவியத் எழுத்தாளர் சொல்ஷனிட்சின், அந்த 'இந்திர ரியை எமக்கு நன்கு தெளிவுபடுத்தியுள்ளார்.

ஒருமாதம் இரு மாதங்கள் அரசாங்கச் செலவில் சுற்றுலாச் செய்துவிட்டு, அங்கு கொடுக்கப்படும் புள்ளிவிபரங்கள் சிலவற்றையும் எடுத்துக்கொண்டு இங்கு வந்து பயணக்கட்டுரை எழுதும் டாக்குத்தருக்குத் தெரிந்ததைவிட, நாங்கள், அந்நாட்டிலேயே பிறந்து வளர்ந்து, அந்நாட்டு அரசாலேயே தண்டிக்கப்பட்டு, அந்நாட்டில் உள்ள அக்கிரமங்களுக்கு எதிராகத் தனியே நின்று போர்க்கொடி எழுப்பி, அங்கு காணப்படும் வண்டவாளங்களை எல்லோருக்கும் [illegible]யப்படுத்திய சொல்ஷனிட்சினின் புத்தகங்களிலிருந்து, பொதுவுடமைக் கொள்கை அமுல்படுத்தப்படும் முறையை நன்கு அறிந்துள்ளோம்.

அடுத்து ஈழத்தம்பி விவரிக்கும் சீன நாட்டைப் பற்றி நோக்குவோம். நாட்டின் பிரதமர் சூ-என்-லாயின் மறைவிற்குப் பின்னர், அந்நாட்டில் ஆளும் வர்க்கத்தினருக்கிடையேயிருந்து வந்த பிளவுகள் அகிலத்திற்கு வெட்டவெளிச்சமாகியுள்ளன. இப்பிளவுகள் எல்லாவற்றையும் விட்டுப் போட்டு மெழுகி, இதுவ ர காலமும் காத்து வந்த திறமை சூ-என்-லாயிற்கே உரியது. அன்னரின் ஆத்மா சாந்தியடைய முன்னமே, அவர் விட்டுச்சென்ற வெற்றிடத்தை நிரப்புவதற்காக, ஆளும்வர்க்கத்தினரிடையே எழுந்த குத்துவெட்டுக்கள் உலகிற்கு அம்பலமாகின. இதனை, 'வர்க்கப்போராட்டம்' (Class Struggle) என்று ஈழத்தம்பி இங்குள்ள வாசகர்களுக்கு பூசி மெழுகி விவரிக்கின்ருர்.

'இது வர்க்கப் போராட்டமல்ல; ஆளும் அந்தஸ்துடையவர்களுக்கிடையே எழுந்துள்ள 'அதிகாரப் போராட்டமே' (Power Struggle) என்று மற்றைய நாட்டுப் பத்திரிகைகளும் சஞ்சிகைகளும் விவரிக்கின்றன. இத்தகையவை ஏகாதி [illegible]ரிக்கா, பிரிட்டன் ஆகியவற்றின் சஞ்சிகைகள் மட்டுங் கூறவில்லை: இவற்றிற்கு மேலாக, தொழிலாளர் நலன் காக்கும் சோவியத் நாட்டு சஞ்சிகைகளே இந்த அதிகாரப் போராட்டத்தை அம்பலப்படுத்தியுள்ளன; அம்பலப்படுத்தி வருகின்றன.

மாஸ்கோவிலிருந்து வெளியாகும் 'நியூடைம்ஸ்' சஞ்சிகையில் (இலக்கம் 18, ஏப்பிரல் 1976) திமிபோனேவ் என்பவர் 'The Peking Power Struggle' எனுந் தலைப்பில் எழுதியுள்ள சிறு கட்டுரையிலிருந்து சில பகுதியின் மூலத்தை அப்படியே வாசகர்களுக்காக கீழே தருகிறேன்.

'The unbiased information about the events in China which Soviet news media provide has evoked jittery, enraged responses from Peking. Articles published there argue that the U. S. S R. is supposedly sympathetic towards the Chinese people's "class enemies" also ascribed to the U. S. S. R. are the attempts to "restore capitalism in China" and "convert it into its colony."

Is there any need to comment on such absurdities, when in effect these same sources admit that certain, moreover influential, forces in China stand behind "the Tienanmen incident?"

மாவோவின் அதிகாரத்தின் கீழ் சீனவில் நடக்கும் அட்டூழியங்களை, அமெரிக்க ஏகாதிபத்திய நாட்டுச் சஞ்சிகைகளிலும் பார்க்க, பொதுவுடமை பேசும் சோவியத்நாட்டுச் சஞ்சிகை நியூடைம்ஸ் அடிக்கடி அம்பலப்படுத்துகிறது. இதற்கு ஈழத்தம்பி என்ன பதில் கூறுவார்?

'பாம்பின் கால் பாம்பறியும், என்பது ஒரு தமிழ்ப் பழமொழி. ஒரு கம்யூனிச வல்லரசில் நடக்கும் வண்டவாளங்கள் பற்றி, இன்னெரு கம்யூனிச வல்லரசுக்குத் தான் நன்கு தெரியும். இதை நாமறிவோம். இதனை அறியாமல் இந்திரகுமாரும் ஈழத்தம்பியும், வாராவாரம் 'தினகரனில்' எழுதித்தள்ளுகிருர்கள்; நாங்களும் படித்துச் சிரிக்கிறோம்.

—சச்சிதானந்தம் ஸ்ரீகாந்தா.

# சுடச் சுடரும் பொன்னுவோம்!

**அன்பு நண்பா,**

எடுப்பான தோற்றம்; மிடுக்கான நடை; ஒளிமடைத்த கண்கள்; உறுதிகொண்ட நெஞ்சம்; எதுவந்திடினும் கலங்கிடாத உள்ளம்; எதையும் தாங்கிடும் இதயம்; ஆம், அவன் — தமிழ்ப்பகைவர்களுக்கு முன் கனலாவான்; விடுதலை வீரர்களுக்கோ குளிர் புனலாவான்; கடந்த கால்நூற்ருண்டுகாலத்தில் களம்பல கண்டவன்; நெருக்கடிகள் பலவற்றை பொறுப்போடு சந்தித்தவன்; விழுப்புண்களைத் தாங்கியவன்; சிறைச்சாலைகளைக் கண்டவன்; தமிழர் விடுதலை இயக்கத்தைச் சுமந்திடும் வலிமைத்தோள்கொண்டவன்; விடுதலைப்படையின் விறல் மிகு தானைத் தளபதி; தமிழினம், தமிழ்மொழி, தமிழ் ஈழம் வாழ தன்னையும் தன் குடும்பத்தையும் அழித்துக் கொண்டு ஒளியூட்டி வழிகாட்டும் மெழுகுவர்த்தி போன்ருன்; தமிழ் ஈழத் தந்தை மூதறிஞர் செல்வாவின் முதல் மாணக்கன்; இயக்கத்தில் அவரது மூத்த மைநதன்; விடுதலை வெறிகொண்டு — விலங்கொடித்தி— வேகத்தோடு இயங்கிவரும் வீரமிகு காளைகளின் பாசமிகு அண்ணன்—

ஆம், அந்த அண்ணன் அமிர்தலிங்கம்—கூட்டிலடைக்கப்பட்ட சிங்கம் போல—நாட்டை ஆள்வோரால் அடைக்கப்பட்டிருக்கின்ற இடத்தில் மாடியிலிருந்தபடி உலவிக்கொண்டிருந்ததை சில நாட்களுக்கு முன் கண்டேன்; அதே எடுப்பான வீர நடை; அதே புன்சிரிப்பு; கிஞ்சிற்றும் சலனமற்ற முகம்; சால்வையொன்றினுல் மேலுடம்பைப்போர்த்தியபடி—அங்கிருந்தபடியே எங்கோ தெருவோரத்தில் நின்றிருந்த என்னைக்கண்டு களிப்புடன் கையசைத்தார்—காந்தமிகு சிரிப்பொன்றை அள்ளி வீசினர் அண்ணன் அமிர்தலிங்கம்!

கொழும்பு பஜட் வீதியில் — சி. ஐ. டி. விடுதியின் மேல்மாடியில் நின்று அந்தத் தலைவன் கையசைத்திட, இரு நூறு யாருக்கு இப்பால் நின்றபடி நானும் கைகளை அசைத்து அவருக்கு எனது வாழ்த்துக்களை தெரிவித்துக்கொண்டேன்! அண்ணன் அமிர்தலிங்கத்தை எம்மிடமிருந்து பிரித்தாலும்—இதயத்தாலும், இலட்சியத்தாலும் இயக்கத்தாலும் அவருடன் நாம் இணைந்து இருப்பதை—எவரால் பிரித்திட முடியும்?

அண்ணன் நின்று கையசைத்த அதே மாடியின் இடது பக்க அறையில் வைக்கப்பட்டு இருந்த நமது மதிப்புக்குரிய பண்டிதர் ஐயா அவர்களும் அங்கிருந்த படியே கையசைத்து தமது மகிழ்ச்சியை தெரிவித்துக்கொண்டார்! கடமை வீரர் நவம் அண்ணனையும், பருத்தித்துறையின் கர்மவீரர் துரைரத்தினத்தையும் அன்று காணும் வாய்ப்பு பெற்றேனில்லை — அவர்கள் கீழேயிருந்ததால்!

நண்பா, தமிழர் விடுதலைக்கூட்டணித் தலைவர்கள் — இயக்கங்களில் இளைஞர்களை மட்டும் ஈடுபடுத்தி அவர்களைச் சிறைகளுக்கனுப்பி விட்டு—தாங்கள் மட்டும் தப்பித்துக் கொள்ளுகிருர்கள் என்றதோர் அபாண்டமான பழி—நம்முடைய தலைவர்கள் மீது மாற்ருரால் சுமத்தப்பட்டு வந்தது சில காலமாக! அந்தப்பழி, அந்தக்கறை சென்ற மே இருபத் ரண்டாந் திகதியுடன் துடைக்கப்பட்டுவிட்டது; அகற்றப்பட்டு விட்டது; நம்முடைய தலைவர்களின் தூய்மையும் துணிச்சலும், தியாக உள்ளமும், இன்று குன்றின் மேலிட்ட விளக்காகிவிட்டது! இதை செய்ததற்காக சிறிமாவோ அரசுக்கு நாம் நன்றி கூறவேண்டும்!

தமிழர் விடுதலைக்கூட்டணி தேர்தலை மட்டுமே நோக்கமாகக்கொண்டுதான், இன விடுதலை பற்றிப் பேசுகிறது என்று சிலர் கொண்டிருந்த தப்பெண்ணம் இன்று தூள் தூளாக்கப்பட்டுவிட்டது. தமிழர் கூட்டணி ஒரு தேர்தல் கட்சியல்ல; அஃது ஓர் புனிதமான, தூய்மையான விடுதலை இயக்கம்; இந்த இயக்கத்திலுள்ள தலைவர்கள் முதல் கடைசித் தொண்டர்கள் வரை, இனத்தின் சுதந்திரத்துக்காகவும், சுபீட்ச வாழ்வுக்காகவும், எந்தவித தியாகம் செய்யவும், தம்மை முற்றுமுழுதாக அர்ப்பணிக்கவும் தயாரகிவிட்டார்கள் என்பதை வட்டுக் கோட்டை மாநாடும் அங்கு நிறைவேற்றப் பட்ட அரசியல் பிரகடனமும் அதைத் தொடர்ந்து நடந்த மே 22 நிகழ்ச்சிகளும் ஏடுத்துக்காட்டி விட்டன.

நண்பா, நம்முடைய தலைவர்கள் சிறைக்கொடுமைகளுக்கோ—பய முறுத்தல்களுக்கோ பயந்து என்றுமே இலட்சியத்திலிருந்து பின்வாங்கியவர்களுமல்ல—இயக்கத்தை விட்டு ஓடி ஒதுங்கியவர்களுமல்ல! நம்முடைய தலைவர்களின் கடந்தகால தியாகவரலாறு இன்றைய இளைஞர்களுக்கு சரிவரத் தெரியாமலிருக்கலாம்—ஆனல் தியாக நெருப்பில் குளித்து இலட்சியத்தைக் கட்டிக் காத்து வளர்த்து வருபவர்கள் அவர்கள்!

சட்டத்தை மீறியதாக இன்றைக்கு கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டிருக்கும் நமது அண்ணன்—தமிழர் விடுதலைப்படையின் தானைத்தளபதி நாவலர் அமிர்தலிங்கம் அவர்கள் கண்ட போர்க்களங்கள் தாம் எத்தனை எத்தனை? தாங்கிய விழுப்புண்கள் தாம் எத்தனை? 1956ம் ஆண்டு காலிமுகத்திடலில் சத்தியாக்கிரகத்தின்போது காடையரால் கல்வீச்சுக்கு இலக்காகி நெற்றி பிளந்து இரத்தம் பீறிட்டுக் கொட்டக் கொட்ட அவர் எழுதிய தியாக வரலாறு கூறவா? 1958ம் ஆண்டு கலவரங்களுக்கு மத்தியில் படகொன்றில் யாழ்ப்பாணத்திலிருந்து மட்டுநகர் சென்று மக்களை இராணுவக் கொடுமையிலிருந்து காத்த தியாக வரலாற்றை கூறவா? 1961 அறப்போராட்டத்தில் பொலிஸ் ஜீப்புக்கு குறுக்கே படுத்த தலைகொடுத்து போராடிய காட்சியை சொல்லவா? 1958 இலும் 1961இலும் தடுப்புக்காவல் கைதியாக இருந்த வரலாற்றை கூறவா? சிறை அளித்து சிறை சென்ற காவியத்தைப்பாடவா? இப்படி

## அரசியல் மேடை

எத்தனை வீர வரலாறுகள் அவருக்குண்டு? இயக்க வரலாற்றில் எத்தனை நெருப்பாறுகளை அவர் நீந்திக் கடந்திருக்கிருர்!

**ஈழத் தமிழினத்தின் விடுதலை வரலாறே அண்ணன் அமிர்தலிங்கத்தின் தியாகத்திஞலும், இரத்தத்திஞலும் வியர்வையிஞலுமன்ருேஎழுதப்பட்டு வருகிறது. இதை மறுப்பார் எவருமுண்டோ?**

இதே போல—அண்ணன் நவரத்தினத்தை கொலைசெய்வதற்காக 1956ம் ஆண்டு யூன் ஐந்தாம் திகதி காலிமுக சத்தியாக்கிரகத்தின் போது காடையர்கள் மூங்கில்தடியினல் அவரது வயிற்றைக் குத்திக் கிழித்தார்களே—அவர் அஞ்சி ஒதுங்கிருரா? அதன் பின்னர் கூட, இயக்கத்தை முடுக்கி, முன்னின்றுழைத்து, சிறைச்சாலைகளுக்கு எத்தனையோ தடவை சென்று திரும்பியிருக்கிருர் — நெருக்கடிகளுக்கு மத்தியில் நிலைகுலையாமல் செயற்பட்டிருக்கிருர்! தியாக நெருப்பில் தோய்த்தெடுத்து—பட்டை தீட்டிய வைரமன்ருே நமது அண்ணன் நவரத்தினம்?

பருத்தித்துறை பா. உ. துரைரத்தினம் மட்டும் என்ன குறைந்தவரா? சின்ன வயதிலிருந்து—அடிமட்டத்தொண்டராயிருந்து இயக்கத்துக்காக உழைத்து — இயக்கத்தையும் வளர்த்து தாமும் வளர்ந்தவர். 1961 அறப்போராட்டத்தின்போது பொலிசார் அவரது கால்களிலும் தலையிலும் பிடித்து அங்கும் இங்கும் பந்துபோல அவரை வீசியெறிந்து துன்புறுத்திய காட்சி இன்றும் எனது மனக்கண் முன்னல் தெரிகிறது. இயக்கத்துக்காக இப்படிப் பல களங்களைக் கண்ட துரைரத்தினம் இன்றும் கைதியாகியிருக்கிருர்! புதிய சட்டத்தரணியாக சத்தியப் பிரமாணம் செய்தவர் சட்டத்தொழிலை மேற்கொள்ளுவதற்கு முன்பே தமிழர் சமுதாய விடுதலைக்காக சட்டத்தை மீறி கைதுசெய்யப்பட்டிருக்கிருர்!

இதுபோன்றுதான்—இயக்கத்துக்காக இடிமுழக்கமென கர்ச்சித்தும்—ஆட்சியாளருடன் வடிதப்போர் நடத்தியும் வந்த பண்டிதர் இரத்தினமும் இன்று களமாடிய வீரராகி ஆட்சியாளரின் விருந்தாளியாகி, இன்று செயல் வீரர் எனும் பெருமையை பெற்றுக் கொண்டிருக்கிருர்.

எனவே நண்பா, நம்முடைய தலைவர்கள் தம்முடைய [illegible] மையை யும், அந்தரங்க சுத்தியையும், தியாக உள்ளத் தையும் [illegible] நிரூ-

பித்து இருக்கிருர்கள்! தலைவர்கள் கைது செய்யப்பட்டதற்கு தமது கடுமையான ஆட்சேபனையை 24.5.76ல் தமிழ்ஈழம் முழுவதும் பூரண ஹர்த்தாலொன்றை நடத்தியதன் மூலம் தமிழ் பேசும் மக்கள் அரசுக்கு உணர்த்தியிருக்கிருர்கள்!

இன்றைய நிலையில்— அரசாங்கம் எவ்வளவு தூரம் கடுமையான நடவடிக்கைகளையெடுக்க முடியுமோ அவ்வளவு தூரம் தனது அடக்கு முறையை நம்மீது பிரயோகிக்கலாம்! பிரதமரின் தம்புல்லைப் பேச்சு அப்படித்தான் அமைந்திருக்கிறது. நமது இயக்கத்தின் மீது தடைச்சட்டம் ஏவிவிடப்படலாம்; நமது தலைவர்கள் எஞ்சியுள்ளோரும் கைதுசெய்யப்படலாம்; இம் என்ருல் சிறைவாசம், ஏனென்ருல் வனவாசம் எனும் நிலை தோன்றலாம் — ஏன் சுதந்திரன் கூட தடைசெய்யப்படலாம்! எந்த நிலைமையையும் சந்திக்க நாம் தயாராக இருப்போம்! இலட்சிய வெற்றிக்காக அரசு தரும் எத்தகைய துன்பத்தையும் ஏற்றுக்கொள்ளவும், நம்மை நாம் அர்ப்பணிக்கவும் தயாராகவிருப்போம்!

தடை என்பது நமக்கு பழகிப் போனதொன்று; 1958ம் ஆண்டிலும், 1961ம் ஆண்டிலும் நமது இயக்கமும், சுதந்திரனும் தடைசெய்யப்பட்டன— ஒரு தடவைக்கு இரு தடவை! அதனல் நாம் அழிந்தாபோய் விட்டோம்! முன்பிருந்ததை விட இன்னும் வேகமாக அல்லவோ வளர்ந்திருக்கிருேம்! எனவே இலட்சிய யாத்திரையில் துன்பங்களை சந்தித்துப் பழக்கப்பட்டவர்கள் — தடைகளால் அழிந்து போகாமல் வளர்ந்து வந்தவர்கள் நாங்கள்! எனவே இலட்சியத்துக்காக சுடச் சுடரும் பொன்னுவோம்! எதையும் தாங்கும் இதயத்துடன் இருப்போம்!

**எமது இயக்கத்தை அரசு ஒரு வேளை தடைசெய்திடலாம்; ஏட்டைத் தடைசெய்திடலாம் இதயத்தில்கனன்றெழும் சுதந்திர வேட்கையை யாரால் தடைசெய்திட முடியும்?**

இவ்வேளையில் தான், நமது இளைஞர்கள் கட்டுப்பாட்டுடன், உறுதியுடன் இருக்கவேண்டும் இலட்சியத்தில் உறுதியும் விசுவாசமும் நமது இளைஞர்களுக்கு இருக்கவேண்டுமே தவிர—

**கட்டுப்பாடு மீறல்**
**கல்லெறிதல்—**
**கலாம் விளைத்தல்—**
**ஆத்திரம், அவசரம்,**

போன்ற செயல்கள் நல்லவையுமல்ல— நம்மவையுமல்ல— இப்படியான செயல்களில் ஈடுபடுபவர்கள் நமது இயக்கத்தவர்களாகவும் இருக்கமுடியாது! இப்படியான செயல்களால் சாதாரண பொதுமக்களின் வெறுப்பு நம் இயக்கத்தவர் மீது ஏற்படவே வழி பிறக்கும்! எனவே நமது இளைஞர்கள் இவ்வாருன செயலில் ஈடுபடாமலிருப்பது மட்டுமல்ல— யாராவது உணர்ச்சிவசப்பட்டு அத்தகைய தவருன செயல்களில் ஈடுபட்டால் அதைத் தடுத்து நிறுத்திடவும் வேண்டும்!

ஆம், கடமை, கண்ணியம், கட்டுப்பாடு

இவையே நம் இலட்சிய வெற்றிக்கு வழி!

இதை நமது இளைஞர்கள் எந்தக் கட்டத்திலும இழந்துவிடக்கூடாது!

தம்பிமார்கள் இதைப் புரிந்துகொள்ள வேண்டும்.

உன் அன்புத் தோழன்,

கோவை-மகேசன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எண்ணம்

# அரசின் சதியை முறியடிப்போம்!

ஒன்றுபட்டாலுண்டு வாழ்வு என்பதை உணர்ந்து ஈழத்தமிழ்த் தேசிய இனம் இன்று ஒரேயணியில் ஒன்று பட்டுவிட்டது. கடந்த கால் நூற்றாண்டாக கட்சி அரசியல் பேசி ஒருவரோடொருவர் மோதிக்கிடந்த ஈழத்தமிழர்கள் இன்று வேற்றுமைகளையெல்லாம் களைந்து ஒரே தேசிய இனமாக இணைந்து தங்கள் விடுதலைக்குப்போராட்டப் பிரதிக்ஞை எடுத்துக்கொண்டு இருக்கிறார்கள்!

1972ம் ஆண்டு மே 14ம் நாள் திருகோணமலையில் தமிழர் கூட்டணியாக உருவாகிய தமிழின ஒற்றுமை கடந்த நான்கு ஆண்டுகளில் படிப்படியாக இலட்சிய அடிப்படையில் வலுப்பட்டு வளர்ந்து — அண்மையில் வட்டுக்கோட்டையில் நடைபெற்ற அதன் தேசியமாநாட்டின்போது தமிழர் விடுதலை இயக்கமாக பரிணமித்திருக்கிறது.

பதவிகளின் அடிப்படையில் — தொகுதிகளைப் பங்கு போடும் நோக்குடன் ஏற்படக்கூடிய 'செயற்கை' ஒற்றுமையை சுதந்திரன் எப்போதும் எதிர்த்து வந்திருக்கிறது; தமிழ் தேசிய இனம் ஒன்றுபடவேண்டும் — அந்த ஒற்றுமை ஓர் இலட்சியத்தின் அடிப்படையில் இயக்க ரீதியாக அமையவேண்டும் என்பதே நாம் நீண்டநெடு நாட்களாகப் பன்னிப் பன்னிக் கூறிவந்திருக்கும் கருத்தாகும். இன்றைக்கு தமிழர் விடுதலைக் கூட்டணி எனும் பெயரில் தமிழ் தேசிய இனத்தின் விடுதலையொன்றையே இலட்சியமாகக்கொண்டு இயக்கரீதியில் ஏற்பட்டுள்ள ஒற்றுமையைக் கண்டு நாம் மட்டுமல்ல — ஒவ்வொரு தமிழ் பேசும் மகனும் மகிழ்ச்சியடையவே செய்கிறான்!

இங்குள்ள தமிழினம் ஒன்றானது கண்டு நாம் மகிழும் அதே வேளையில் — இந்த ஒற்றுமையை சிதறடித்திட ஐக்கியத்தைப் பிளந்திட — இலட்சியத்தை சிதைத்திட — என்ன என்ன உபாயங்களைக் கையாளலாம் — எப்படி எப்படிச் சிண்டுமுடியலாம் — என்னென்ன நடவடிக்கைகளையெடுக்கலாம் — என்பதில் ஆட்சியாளர்களும் தமிழ்ப் பகைவர்களும் இப்போது தீவிரமாகத் தங்கள் சிந்தனையை செலுத்த முற்பட்டிருக்கிறார்கள்.

இவ்வளவு தூரம் தமிழ் சமூதாயம் ஒரேயணியில் — ஒரே தலைமையின்கீழ் திரளும்; உரிமைப்போர் நிகழ்த்தும்; என்று ஆளவந்தார் கனவிலும் கருதியிருக்கமாட்டார்கள்! ஆனால் இன்றோ அடம்பன் கொடியும் திரண்டு நிற்பதுபோல — தமிழ் பேசும் மக்கள், ஒரு தேசிய இனமாக மிடுக்குடன் எழுந்து விடுதலைக்காக குரல் கொடுப்பது கேட்டு, அவர்கள் அலமந்து, அலறத் தொடங்கியிருக்கிறார்கள்.

அடுத்துக்கெடுத்தல்—
ஆசை காட்டுதல்—
அச்சமூட்டுதல்—
அடக்குமுறைகளை அள்ளி வீசுதல்—

போன்ற பல்வேறு வழிகளைக் கையாண்டு தமிழ் தேசிய இனத்தின் விடுதலை இயக்கமான தமிழர் விடுதலைக் கூட்டணியில் அங்கம் வகிப்போரை — பிளவுபடுத்திட — பிரித்திட — கூறுபோட்டிட அரசு முயற்சிக்கவே செய்யும்; அந்த முயற்சியில் ஏற்கெனவே இறங்கியும்விட்டது.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் இலட்சியத்திலிருந்து மாறுபடுவோருக்கு — வேறுபடுவோருக்கு — அரசாங்க ஊதுகுழல்களான நாளேடுகள் அனைத்தும் நல்ல விளம்பரம் கொடுக்கத் தொடங்கியுள்ளன; வானொலியிலும், இத்தகையவர்களின் அறிக்கைகள் மூன்று நான்கு தடவைகள் செய்திகளில் திரும்பத்திரும்ப ஒலிபரப்பப்படுகின்றன,

அண்மையில் தம்புல்லையில் ஒரு கூட்டத்தில் பேசிய பிரதமர், தமிழர் விடுதலைக் கூட்டணியிலிருந்து தமிழரசுக் கட்சியை மட்டும் தனியே பிரித்தெடுத்து தாக்கிப் பேசியிருப்பதும், தமிழின ஒற்றுமையை பிரித்தழிக்கும் சூழ்ச்சியின் ஒரு அம்சம் என்பதை அனைவரும் புரிந்துகொள்ளவேண்டும். பிரதமரின் இந்தப் பேச்சுக்கு, தமிழ் காங்கிரசின் பொதுச்செயலாளரும் தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயல் அதிபர்களில் ஒருவருமான திரு மு. சிவசிதம்பரம் உடனடியாகச் சுடச்சுடப் பதிலடி கொடுத்திருக்கிறார்!

ஆக, தமிழர் விடுதலைக் கூட்டணியாக ஒன்றுபட்டு விடுதலைக்குப்போராடும் தமிழ்தேசிய இனத்தை மீண்டும் பிரித்து, சின்னாபின்னப்படுத்தி அழித்தொழிக்கும் சதி முயற்சிகள் ஆரம்பிக்கப்பட்டுவிட்டன; வேகமாக முடுக்கிவிடப்பட்டிருக்கின்றன. இந்தப் பாரிய சதியை சூழ்ச்சியை, தமிழ்பேசும் மக்களும் தமிழர் விடுதலைக்கூட்டணியில் அங்கம் வகிப்போரும் புரிந்துகொண்டு புத்திசாலித்தனமாக அவற்றை முறியடித்திடவேண்டும்!

ஒரு சிலர் அரசின் ஆசைவார்த்தையில் மயங்கியோ — அச்சுறுத்தலுக்குப் பயந்தோ பின்வாங்கலாம். அப்படிப்பட்டவர்களும் பின் வாங்குவது போல நடிக்கலாமே தவிர அவர்களுக்கு மனச்சாட்சி என்று ஒன்று இருக்குமானால், அது அவர்களது செயல் தவறென்று அவர்களுக்குக் குத்திக்காட்டிக் கொண்டேயிருக்கும்!

கால் நூற்றாண்டு காலத்துக்குப் பின்னர் கட்டியெழுப்பிய தமிழ்தேசிய இனத்தின் ஒற்றுமைக்கோட்டையான — இலட்சியக்கோட்டையான தமிழர் விடுதலைக் கூட்டணியை சிதறவிடாது முறியவிடாது — கட்டிக்காக்கவேண்டியது தமிழ் பேசும் மக்களின் நீங்காக் கடமையாகும்!

"—ஒரு இயக்கத்தின் தலைவர்களாக விளங்குபவர்கள் ஒரு காலகட்டத்தில் கொள்கை பிறழ்ந்தோ — இறப்பினால் மறைந்தோ, அரசியலைத் துறந்தோ போகலாம்; ஆனால் சுதந்திர விடுதலை இயக்கம் அதனால் தடைப்படவேண்டும் என்ற நியதி கிடையாது; தலைவர்கள் மாறலாம்; மறையலாம்; ஆனால் இயக்கம் தனது புனித இலட்சியங்களுக்காக தொடர்ந்து போராடும்" என்று அன்றொரு நாள் தந்தை செல்வா கூறியது போல் —

தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு தனி மனிதர்கள் முக்கியமல்ல; இன விடுதலை எனும் அதன் இலட்சியமே முக்கியம்; இந்த இலட்சியத்தை சுற்றிக்கட்டியெழுப்பப்பட்டிருக்கும் ஒற்றுமைக் கோட்டையை சிதறடிக்க அரசு நடத்தும் முயற்சிகள் அனைத்தையும் தமிழ் மக்கள் முறியடித்தே தீருவார்கள்!

# பூரண ஹர்த்தால்

## —ஒரு கண்ணோட்டம்

22-5-76 சனி காலை தமிழ் தலைவர்கள் யாழ்நகரில் வைத்துக் கைதாகிக் கொழும்புக்கு கொண்டு செல்லப்பட்டார்கள். தலைவர்கள் கைதான செய்தி காட்டுத் தீபோல் வடபகுதி முழுவதும் பரவியது. பட்டி தொட்டி எங்கும் தலைவர்கள் கைதான செய்தியே பேசப்பட்டது. மக்களின் மனோ நிலையை துப்பறியும் பொலிசார் அறிந்து அன்றும் திங்களும் இரவு 7 மணியிலிருந்து பஸ்களை ரத்து செய்தனர். எங்கும் பொலிசார் துப்பாக்கிகளுடன் காணப்பட்டனர். இராணுவத்தினர் அங்குமிங்குமாகத் திரிந்தனர் ஜீப்களில்.

மே 21ம் நாளன்று வடபகுதி பாடசாலைகள் அனைத்தும் வெறிச்சோடிக் கிடந்தன. ஆசிரியர்கள் சிற்றூழியர் மட்டும் பாடசாலைகளில் காணப்பட்டனர். பாடசாலைப் பகிஷ்கரிப்பு பூரண வெற்றியைத் தந்தது. அடுத்த நாள் தலைவர்கள் கைதான அன்று வாலிபர்கள் குமுறிக்கொண்டிருந்தனராயினும் செயலாளர் நாயகம் அமிர்தலிங்கம் கைது செய்யப்பட்டு அழைத்துச் செல்லப்பட்ட போது வாலிபர்களுக்கு அவர் இட்ட அன்புக் கட்டளையை ஏற்று வாலிபர்கள் கட்டுப்பாட்டுடன் இருந்தனர். அன்று வடபகுதியில் எங்கும் அசம்பாவிதம் நிகழவில்லை.

ஞாயிற்றுக்கிழமை எங்கும் அமைதி குலைந்து காணப்பட்டது. தலைவர்கள் கைதாகி விடுதலையாகவில்லை என்ற செய்தியை அறிந்த மக்கள தலைவர்களை கைது செய்ததற்காக பூரண ஹர்த்தால் வடபகுதியில் நடாத்த வேண்டுமென்று திட்டமிட்டனர். ஞாயிற்றுக்கிழமை ஆங்காங்கு சென்று திங்கள் பூரண கதவடைப்பு, ஹர்த்தால, பாடசாலைப் பகிஷ்கரிப்பு என்று அறிவித்தனர். துண்டுப் பிரசுரமொன்றையும் விநியோகித்தனர்.

சுவர்களில் "தலைவர்கள் கைது" "தமிழினமே உன் பதில் என்ன?" "அண்ணன் அமிர் கைது; வாலிபனே வாழா இருப்பதா?" என்றெல்லாம் எழுதியிருந்தனர் போதிய அறிவித்தலின்றியும், மக்கள் தாமாகவே பூரண துக்க தினத்தை அனுட்டித்தனர்.

வெள்ளிக்கிழமை ஒரு சில அடிவருடிகளின் பிள்ளைகள் பாடசாலைகளுக்குச் சென்றார்கள். திங்கட்கிழமை அதுவும் இல்லை.

யாழ் நகர நவீன சந்தை சுவர் ஒன்றில் "24—5—76 துக்கதினம்" என எழுதப்பட்டிருந்தது மாலை 6மணி போல் இரு மாநகர சபை ஊழியர் அதனை அழித்துக் கொண்டிருந்தனர். யாரின் கட்டளையில் அதனை அழித்தனரென அறிய முற்பட்ட போது எவரது வேண்டுதலுமின்றி இரு வாலிபர்களும் அதனை அழித்ததாக அறிந்தேன். அழித்த இருவருக்கும் மாநகரசபை ஆணையாளர் பதவி கிடைத்ததோ என்னவோ!

ஹர்த்தாலா, துக்கதினமா எதுவாக இருந்தாலும் யாழ்பஸ்நிலையத்தில் தோழர் ஒருவர் தனது கடையைப் பரப்பி வைப்பது வழக்கம்; அந்தக் கடையின் பெயரை நான் இங்கு குறிப்பிடத் தேவையில்லை. வடபகுதி மக்கள் நான் சொல்லாமலே இது எந்தக் கடை என்று உணர்வார்கள். இந்த தோழர், ஜே. பி. திங்கள் மட்டும் தனது கடையைப் பூட்டி துக்கதினத்தில் பங்கெடுத்தார். அன்று மாலை 6 மணி போல் சில கம்யூனிஸ்ட் தோழர்கள் வழக்கமாக ஒசியில் பத்திரிகை படிக்க அங்கு குழுமியபோதும் அன்று ஓசிப் படிப்பு அவர்களுக்குக் கிடைக்கவில்லை. கடை அடைப்பு பூரணமாக அங்கு அமுல் நடத்தப்பட்டது.

கம்யூனிஸ்ட் காரியாலயப் பக்கம் போய்ப் பார்த்தேன். அங்குமூன்று தோழர்கள் வெளியில் நின்றுகொண்டிருந்தனர். ஆனால் காரியாலயம் கடைசி வரை திறக்கப்படவில்லை. காலைதொட்டு மாலைவரை யாழ்நகரில் ஒரு தேனீர்க்கடைதானும் திறக்கவில்லை.

அன்று வடபகுதிக்கு வந்திருந்த தமிழ்நாட்டு நண்பர்களை நல்லூரில் வைத்துச் சந்தித்தேன். இவர்கள் இலங்கையைச் சுற்றிப் பார்க்க இரு பஸ்களில் வந்திருந்தனர். அவர்கள் அன்று எதுவும் வாங்கமுடியவில்லையே என்று அங்கலாய்த்தனர். என்றாலும் தமிழ்த் தலைவர்கள் கைதானதற்கு இப்படி ஹர்த்தால் வைத்த வடபகுதி தமிழ் மக்கள் தமிழ்நாட்டையும் மிஞ்சி விட்டார்கள் என்று என்னிடம் கூறினர்.

"ஒருவரைப் பார்த்து தி. மு. க. மீண்டும்" என்று கேட்டுஎனது கேள்வியைமுடிக்குமுன் தேர்தல் நடக்கட்டும்; மீண்டும் தமிழன் ஆட்சி தான் ஏற்படும் அதில் சந்தேகமில்லை என்றார் மு. க. மீண்டும் முதல்வராவார்; நீங்கள் நல்லாக நம்பலாம் என்றும் கூறினர்.

திங்கள் தலைவர்கள் விடுதலையாகவில்லை என்றதும் ஆங்காங்கு பஸ்களை ஓடவிடாது தடுத்தனர் வாலிபர்கள். பஸ்கள் சில சேதமுற்றதும் உண்மைதான். இதன் காரணமாக திங்களும் மாலை 6மணியுடன் பஸ் ஓட்டம் தடைசெய்யப்பட்டது. பரந்தன், கிளிநொச்சிப் பகுதிகளிலும் அரசாங்கச்சொத்துக்கள் சேதப்படுத்தப்பட்டன என்ற செய்தியும் கிடைத்தது. யாழ் நகரில் திங்கட்கிழமை டாக்ஸிகள் எதுவும் ஓடவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. டாக்ஸி ஸ்ராண்ட் வெறுமையாகக்கிடந்தது.

பூரண ஹர்த்தால் தினங்களில் பஸ்களைசேதப்படுத்துவதைக் காட்டிலும் பொது மக்கள் எவரும் பிரயாணம் செய்யாமல் பார்த்துக் கொள்வது மேலானதாகும்.

21-5-76 வெள்ளிதொடக்கம் 24-5-76 வரை வடமாகாண பஸ் ஓட்டத்தினால் ஏற்பட்ட வசூல் சுத்த மோசம். நான்கு நாட்களிலும் 40 ஆயிரம் இ. போ. ச.வுக்கு நஷ்டம் என்பதையும் நாம் மறப்பதற்கில்லை.

மக்கள் தாமாகவே சிந்தித்து ஏற்பாடு செய்த ஹர்த்தால் பூரணவெற்றி பெற்றதற்கு திருவாளர் பொதுசனத்திற்கு ரொம்ப தாங்க்ஸ். சபாஷ்.

— அப்பலோ

## சுங்கச் சாவடியில் இந்திய ஏடுகள்!

இந்தியாவின் பிரபல ஆங்கில ஏடுகளான இந்தியன் எக்ஸ்பிரஸ், 'இந்து' போன்ற ஆங்கில ஏடுகளைக் கொண்ட பொதிகள் தொடர்ந்து ஐந்துநாட்களாக கொழும்பு சுங்கச்சாவடியில் தடுத்து வைக்கப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. இந்த ஏடுகளில் இலங்கைத் தமிழர்போராட்டம் பற்றி செய்திகள் கட்டுரைகள் இடம்பெற்றிருக்கலாமென்றும், அதன் காரணமாகவே இவை தடுத்து வைக்கப்பட்டிருக்கலாமெனவும் அரசியல் வட்டாரங்களில் ஊகிக்கப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய தொகுதிகள் தமிழ் பேசும் மக்கள் நிலையென்ன?

## 168-க்கு ஆக 25!

திருகோணமலை மாவட்டத்தில் இதுவரை தமிழர்களுக்கு இருந்து வந்த இரண்டு பிரதிநிதித்துவம், அண்மையில் வெளியிடப்பட்ட புதிய தொகுதி நிர்ணயக் குழுவின் சிபார்சின் படி ஒன்ருகக் குறைக்கப்பட்டு விட்டது. அதே வேளையில் திருகோணமலையில் குடியேறிய சிங்களவர்களுக்காக 'சேருவில' என்ற புதிய சிங்களத் தொகுதி உருவாக்கப்பட்டுள்ளது. திருகோணமலை மாவட்டத்தில் மூதூர் தொகுதியிலிருந்து ஒரு முஸ்லிமும், சேருவில தொகுதியிலிருந்து ஒரு சிங்களவரும், திருகோணமலைத் தொகுதியிலிருந்து ஒரு தமிழரும் தெரிவு செய்யப்படுவார்கள்.

இரட்டை அங்கத்தவர் தொகுதியாகவிருந்த மூதூர் தொகுதியை ஒற்றையங்கத்தவர் தொகுதியாக்கியதன் மூலம், அங்கு வாழும் பன்னீராயிரத்துக்கு மேற்பட்ட தமிழர்கள் இதுவரை அனுவித்து வந்த பிரதிநிதித்துவத்தை இழக்கிருர்கள்.

அம்பாறை மாவட்டத்தில் பொத்துவில் தொகுதி இரட்டை அங்கத்தவர் தொகுதியாக்கப்பட்டிருக்கிறது. இதனுல் இங்கிருந்து ஒரு தமிழர் தெரிவு செய்யப்பட வாய்ப்பு ஏற்படுகிறது. அம்பாறை மாவட்டத்தில் வாழும் அறுபதினுயிரத்துக்கு மேற்பட்ட தமிழர்களின் நீண்டகாலக் கோரிக்கை இதனுல் நிறைவேறுகிறது.

கிழக்கு மாகாணத்தில், திருகோணமலை, பொத்துவில், மட்டக்களப்பு, பட்டிருப்பு, கல்குடா ஆகிய ஐந்து தொகுதிகளிலிருந்து தமிழர்களுக்கு ஐந்து பிரதிநிதித்துவமும், மூதூர், பொத்துவில் சம்பாந்துறை, கல்முனை, மட்டக்களப்பு ஆகிய தொகுதிகளிலிருந்து முஸ்லிம்களுக்கு ஐந்து பிரதிநிதித்துவமும் வழங்கப்படுகிறது.

சிங்களவருக்கு அம்பாறைத் தொகுதியும், சேருவாவில எனும் புதிய சிங்களத் தொகுதியுமாக—ஆக இரு தொகுதிகள் வழங்கப்பட்டிருக்கின்றன.

நிந்தாவூர்த் தொகுதி கலைக்கப்பட்டு விட்டது.

வடமாகாணத்தில், முல்லைத்தீவு என்ற புதிய தமிழ்த்தொகுதி உருவாக்கப்பட்டிருக்கிறது.

உடுவில் தொகுதியின் பெயர் மட்டும் மானிப்பாய் தொகுதியென மாற்றம் செய்யப்பட்டிருக்கிறது.

மலையகத்தில் வாழும் இலங்கைப் பிரஜாவுரிமை பெற்ற நான்கு இலட்சம் இந்தியவம்சாவளியினருக்கு மகா நுவரெலியாத் தொகுதியில் ஒரேயொரு பிரதிநிதித்துவமே வழங்கப்பட்டிருக்கிறது. மலையகத் தமிழர் சார்பில் எட்டுப் பிரதிநிதிகள் தெரிவு செய்யப்படக்கூடிய முறையில் தொகுதிகள் பிரிக்கப்படவேண்டுமென தமிழர் விடுதலைக் கூட்டணி கேட்டிருந்தது.

1947ல், 101 பிரதிநிதிகளைக் கொண்ட பாராளுமன்றத்தில் மலையகத் தமிழர்கள் பிரதிநிதிகளாக ஏழு பேர் தெரிவு செய்யப்பட்டிருந்தனர். 1976ல் 168 பிரதிநிதிகளை தெரிவு செய்ய சிபார்சு செய்யப்பட்டிருக்கும் தொகுதிகளில், ஆக ஒரேயொரு பிரதிநிதித்துவமே மலையகத் தமிழருக்கு வழங்கப்பட்டுள்ளது.

கொழும்பு வாழ் தமிழர்கள் தங்கள் பிரதிநிதியை தெரிவு செய்யக்கூடிய முறையில் கொழும்பு வடக்குத் தொகுதியை இரட்டை அங்கத்தவர் தொகுதியாக்க வேண்டுமென்று விடுத்த கோரிக்கையும் நிராரிக்கப்பட்டிருக்கிறது.

புதிய தேசிய அரசுப் பேரவைக்கு 160 தொகுதிகளிலிருந்து 168 பிரதிநிதிகள் தெரிவு செய்யப்படுவார்கள். இவர்களில் 25 பேர் மட்டுமே வடக்கு, கிழக்கு, மலையகத்திலிருந்து தெரிவு செய்யப்பட வாய்ப்புண்டு.

## மாணவரின் உணர்ச்சி!

தமிழர் விடுதலைக் கூட்டணியில் வேண்டுகோட்படி 21-5-76ல் பாடசாலைகளைப் பகிஷ்கரித்த யாழ்ப்பாணத்தைச்சேர்ந்த மாணவ மாணவியர், தலைவர்கள் கைதானதை எதிர்த்து 24-5-76 திங்கட்கிழமையும் பாடசாலையைப் பகிஷ்கரித்தனர். பல பாடசாலைகளில் இந்தப் பகிஷ்கரிப்பு 25-5-76 செவ்வாய்க்கிழமையும் நீடித்தது. வர்த்தக நிலையங்கள் பல திங்கள், செவ்வாய் இரு நாட்களும் மூடிக்கிடக்கக் காணப்பட்டன. யாழ் பல்கலைக்கழக வளாக மாணவ, மாணவியரும் இப் பகிஷ்கரிப்பில் நூற்றுக்கு நூறு வீதம் பங்குபற்றியது குறிப்பிடத்தக்கது.

## கட்டுப்பாடு...

—3-ம் பக்கத் தொடர்

நடவடிக்கைகள் எதிலும் தெரிந்தோ தெரியாமலோ நமது இளைஞர்கள் ஈடுபடக் கூடாது; உணர்ச்சியைக் கட்டுப்படுத்தி அதை இலட்சிய வளர்ச்சிக்குப் பயன்படக்கூடிய முறையில் உபயோகிக்கவேண்டும்'' என்றும் திரு. அமிர்தலிங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

திரு. அமிர்தலிங்கம் இந்த வேண்டுகோளை விடுத்தபோது திரு. வி. என். நவரத்தினம் பா. உ. பண்டிதர் க. பொ. இரத்தினம் பா.உ. க. துரைரத்தினம் பா. உ. மு. சிவசிதம்பரம் ஆகியோரும் உடனிருந்தனர்.

குழப்பத்தை ஏற்படுத்தி விடுதலைக் கூட்டணிமீது மக்களுக்கு வெறுப்பை ஏற்படுத்த மாற்றுக் கட்சியினர் முயலலாமென்றும், இது விஷயத்தில் நமது இளைஞர்கள் எச்சரிக்கையுடனும் கட்டுப்பாட்டுடனும் செயற்படவேண்டுமென்றும் பருத்தித்துறை பா. உ. திரு. க. துரைரத்தினம் தெரிவித்தார்.

## சிறையிலிருக்கும் இளைஞருக்கு சத்திர சிகிச்சை!

விசாரணையின்றி நீண்டகாலமாக சிறையில் வைக்கப்பட்டிருக்கும் தமிழ் இளைஞர் ஒருவர் கொழும்பு பெரியாஸ்பத்திரியில் சென்ற வாரம் வைத்திய சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார். இந்த இளைஞருக்கு சி. ஐ.டியினர் அடித்த அடியால் உடம்பில் இரத்தம் கட்டியிருந்ததுடன், சலத்துடன் இரத்தமும் வெளியேறியதாம். அதற்காகவே சத்திர சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டாராம்.

இந்த இளைஞரை பரிசோதனை செய்து சத்திர சிகிச்சை செய்த டாக்டர், இந்த இளைஞரிடம் நீ என்ன பயங்கரக் குற்றம் செய்திருக்கிருய்? பயங்கரக் குற்றம் செய்திராவிட்டால் இப்படிக்கடுமையாக அடித்திருக்கமாட்டார்களே! என்று கேட்டாராம்! இளைஞன் சிரித்துக்கொண்டானும்!

ஆம், இந்நாட்டில்தமிழன் தனது உரிமையைக் கேட்பது இன்று பயங்கரக் குற்றமாகத்தானே தெரிகிறது!


## மலையகத்தில் இ. தொ. கழக கூட்டங்கள்

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் கட்டுப்பாட்டிலுள்ள இலங்கைத் தொழிலாளர் கழகம் மலையகத்தில் வேகமுடன் செயற்படவிருக்கிறது. இதற்கான திட்டங்கள் தயாராகிவருகின்றன. இதன் முதல் கட்டமாக 29-5-76 காலை 10 மணிக்கு இ. தொ. கழக மஸ்கெலியா பணிமனையில் கழகத்தலைவர்கள். வாலிப முன்னணித் தலைவர்கள், மாதர் முன்னணித் தலைவர்கள் ஆகியோரைக்கொண்ட பொதுக் கூட்டமொன்று நடைபெறுகிறது. 30-5-76 காலை 10 மணிக்கு இருமக்கொல்லை பணியக்கணக்கு தோட்டத்தில் தேர்தல் கூட்டம் திரு. எம்; முருகன் தலைமையில் நடைபெறுகிறது. அன்று பிற்பகல் 1மணிக்கு அட்டன் இ. தொ. கழக பணிமனையில் நடைபெறும் கருத்தரங்கில் இ. தொ. க. தலைவர் அ. தங்கத்துரை பா. உ, செ. இராசதுரை பா. உ. கழகப் பொதுச் செயலாளர் சட்டத்தரணி மூ. பரராசசிங்கம், உதவி செயலாளர் எஸ். தங்கரத்தினம் ஆகியோர் பேசுவார்கள்.

## சட்டமறுப்பு

—1-ம் பக்கத் தொடர்

1956ம் ஆண்டு காலிமுக சத்தியாக்கிரகம் நடைபெற்றதும், யூன் 5ம் நாள்; சிவகுமாரன் தமிழினத்துக்காக தன்னைப்பலி தந்ததும் யூன் 5ம் நாள்; தமிழினத்தின் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இந்த நாளில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் இரண்டாவது சட்டமறுப்பு நிகழவிருப்பதாக அவர் தெரிவித்தார்.



தமிழ்த் தலைவர்கள் கைது செய்யப்பட்டதை எதிர்த்து 24—5—76ல் தமிழ் மக்கள் நடத்திய ஹர்த்தாலின் போது, பிள்ளைகள் செல்லாமையால் பாடசாலையொன்றின் வகுப்பறை வெறுமையாகத் தோன்றும் காட்சி இது.


பளிச்சிடும் வெண்மைக்கும், துரித சலவைக்கும் பாவியுங்கள்

''கூடுதல் நீலம் கலந்த மில்க்வைற் சலவைப் பவுடர்''

நிறைந்த அளவில், குறைந்த விலையில் எங்கும் கிடைக்கும்.

**மில்க்வைற் சவர்க்காரத் தொழிலகம் யாழ்ப்பாணம்.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாள்தோறும் நடைபெறுகிறது தனிச் சிங்களத் திணிப்பு!

## கைதுசெய்யப்படுவதற்கு முன் பிரதமருக்கு பண்டிதர் எழுதிய கடிதம்!

மே 22ம் திகதி சட்ட மறுப்பு போராட்டத்திலீடு பட்டுக் கைது செய்யப்படுவதற்கு முன் பிரதமர் திருமதி சிறிமா பண்டாரநாயகாவுக்கு காவலூர் பா. உ. பண்டிதர் இரத்தினம் எழுதியிருந்த கடிதமொன்றில் தமிழ் மக்கள் மீது நாள்தோறும் நடைபெறும் தனிச் சிங்களத் திணிப்பு அவர்களது பொறுமையை சோதிப்பதாக இருப்பதாகவும், இதன் காரணமாகவே அவர்கள் சிந்தனையில் தம்மைத்தாமே ஆள வேண்டும் என்ற உணர்வு வலுப்பெற்று வளர்ந்துள்ளதாகவும் குறிப்பிட்டிருக்கிறார்.

பண்டிதரின் குறித்த கடிதம் வருமாறு:-

12-2-76 ஆம் திகதி திரு. கோ. நிமலன் கடவுட்சீட்டுப்பெறுதற்கு விண்ணப்பப் படிவத்தை தமிழில் நிரப்பி குடிவரவு குடியகல்வுத் திணைக்களத்துக்கு அனுப்பி வைத்தார்.

1. இவருக்கு 24-2-76இல் அனுப்பப்பட்ட ... 76/6033 ஆம் இலக்கமுடைய அஞ்சல் அட்டை தனிச்சிங்களத்தில் நிரப்பி அனுப்பப்பட்டது.

2. பின்னர் 16-3-76 ஆம் திகதி அனுப்பப்பட்ட 10-7-69 ஆம் திகதியையும் 919 ஆம் எண்ணையுமுடைய சுற்றறிக்கை தனிச்சிங்களத்திலேயே உள்ளது.

3. இவருக்கு வழங்கப் பட்ட கடவுச்சீட்டில் குறிப்புக்கள் தவிர்ந்த அனைத்தும் சிங்களத்திலும் ஆங்கிலத்திலுமேயுள்ளன. இது தமிழ் மொழி விசேட ஏற்பாடுகள் சட்டத்துக்கும் இறைசேரிச் சுற்றறிக்கை என் 760க்கும் மாறுபட்டதென்பதை நான் சுட்டிக்காட்டத்தேவையில்லை. இவற்றுக்கு மாறாக கடமையாற்றும் உத்தியோகத்தர் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

அரசியலமைப்பில் தமிழுக்கு உரிமை கொடுக்கப் பட்டது என்று கூறுவதாலோ, தமிழ்மொழி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தை நடைமுறைப் படுத்துகிறோமென்று மேடைகளில் உங்கள் கட்சியினர் முழங்குவதாலோ தமிழ் மக்கள் எவ்வித பயனையும் அடையவில்லை என்பதையும், இன்று தமிழ் மக்கள் தங்கள்மொழியில் அரசாங்கத்துடன் எவ்வித அலுவல்களையும் செய்யமுடியாதவர்களாக இருக்கிறார்கள் என்பதையும் இது நன்கு காட்டுகின்றது.

இத்தகைய தனிச்சிங்களத் திணிப்பு நாள்தோறும் நடந்துகொண்டிருப்பதாலுமே இன்று தம்மைத் தாமே ஆளுதற்கான கோரிக்கையைத் தமிழ் மக்கள் முற்றுமுழுதாக ஆதரிக்கிறார்கள் என்பதைத் தமிழ் மக்கள் தனிச் சிங்களத் திணிப்பால் அடையும் துன்பங்களை உணராமல் கண்மூடி மௌனியாக இருக்கும் உங்களுக்கு இச் சந்தர்ப்பத்தில் எடுத்துரைக்க விரும்புகின்றேன்.

இந்த விடயத்துக்கு உங்கள் கவனத்தைத் தேசிய அரசுப்பேரவை வாயிலாக ஈர்க்கலாம் எனினும், முதலில் இக்கடிதமூலம் இதனை உங்கள் கவனத்துக்குக் கொண்டு வருகின்றேன்.

சிறப்பாக இந்த விடயம் குறித்தும், பொதுவாகத் தனிச்சிங்களத் திணிப்புக் குறித்தும் நீங்கள் எடுக்கும் நடவடிக்கைகளை அறிய விரும்புகின்றேன்.

## யாழ் சுதந்திரக் கட்சிக்குள் குத்துவெட்டு தொடர்கிறது!

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி இரண்டு பட்டிருக்கும் கதையை சிலவாரங்களுக்கு முன் எழுதியிருந்தேன். தற்போது இருபக்க இழுபறியில் ஆணையாளர் பக்கம் பலம் பெருகிவருவதாகத் தெரிகிறது.

பேரின்பநாயகம் அன்றோ சில மாதங்களின் முன் அதன் செயலாளரான ஆணையாளர் வி. நடராசாவை, பதவி இறக்கியிருந்தது.

இன்றோ ஆணையாளர் நடராசா புதிதாக ஆட்களைச் சேர்த்து கட்சிக்கு நிரந்தர கட்டடமொன்றை யாழ் நகரில் கட்டிக்கொடுக்க முன் வந்துள்ளார். முனிசிபல் சபையில் அங்கம் வகித்துச் 'சம்திங்' எதுவும் வாங்காத ஆணையாளர் நடராசா, தன்னை பதவி இறக்கிய பேர் வழிகளைப் பழிவாங்க இரகசிய திட்டங்கள் பல வகுத்து வருகிறாராம். இதனால் தற்போதைய சுதந்திரக் கட்சி நிர்வாகிகள் பலர் திரிசங்கு சொர்க்கத்தில் இருக்கிறார்கள். முனிசிபல் சபை கலைக்கப்பட்டதும் 'ஒய்ந்தது பாளை உட்கார்ந்தாள் சாணந்தி' என்றிருந்த அனைவரும் ஆணையாளரின் சில நடவடிக்கையினால் நெருப்பில் மிதித்த வன்சகிதியாக துள்ளிக் குதித்துத் திரிகிறார்கள். முதுகில் புண்ணை வைத்துக் கொண்டு ஆணையாளருடன் எப்படி முகம் கொடுத்து போட்டியிடுவது என்று சினம் கொண்டு சீறித்திரிகிறார்கள்.

இவர்கள் ஓய்ந்திருக்க ஆணையாளர் நடராசா சமீபத்தில் நிரந்தர கட்டடமொன்று தலை நகரில் கட்டப்படும் என்ற செய்தியை காற்றில் பறக்கவிட்டிருக்கிறார். அதற்கான காணியையும் அரசிடமிருந்து பெற்று விட்டாராம் பதவி இறக்கிய செயலாளர்.

இவற்றை எல்லாம் கண்டு மிரண்டு திரியும் பேரின்ப நாடகம் கம்பெனி பங்குதாரர்கள், திருமதி துரையப்பாவை கோதாவில் இறக்க நிருமதிக்கு பல கடிதங்களை எழுதிப்போட்டுக் கொண்டு வருகிறார்களாம். கடிதத்தில் கண்டபடி ஆணையாளரைக் குற்றம் சுமத்தியுள்ள இவர்கள் திருமதி துரையப்பாவை யாழ்நகர் அழைப்பித்து ஆணையாளருக்குப் பாடம் புகட்ட கங்கணம் கட்டியுள்ளனர். எப்படியும் திருமதி துரையப்பா ஒரு தடவை யாழ் வந்தால்தான் இந்த கட்சி இழுபறிக்கு ஒரு முடிவுகிடைக்குமென்று நம்புகிறார்கள்.

திருமதி துரையப்பா சொல்படி பிரதமரும் பீலிக்சும் சமீபகாலமாக யாழ் நகரை ஆட்டிப்படைக்கின்றனர். இவ் இரு கோஷ்டிகளிலும் திருமதியின் பக்கபலம் இருக்கும் கோஷ்டிக்கு பயமெதுவும் இருக்க நியாயமில்லை என்றும் பேசிக்கொள்ளப்படுகின்றது.

கட்சிக் குத்துவெட்டுக்கள் இவ்வாறிருக்க — ஆணையாளர் நடராசா தனது புகைப்படத்தை வைத்து "பாட்ஜ்சு"கள் செய்வித்து வரும் செய்தியும் அம்பலத்திற்கு வந்திருக்கிறது. இந்த 'பாட்ஜ்' புதிதாக நடராசா பக்கம் சேரும் ஆதரவாளர்கள் அணிவதற்கோ தெரியவில்லை. இந்த சிதம்பர ரகசியம் வெகு விரைவில் திரை நீக்கம் செய்யப்படும். அப்போ சந்திப்போம்.

—புத்தொளி

## "முழுமையான சுதந்திரம்பெற தமிழர்கள் ஒன்றுபடவேண்டும்!"

### பிரபல தொழிற்சங்கவாதி கே. சி. நித்தியானந்தா பேச்சு!

"இந்நாட்டில் இயங்கி வரும் தொழிற் சங்கங்களை உருவாக்கி, பலதியாகங்கள்செய்து உயிரையே கொடுத்தவர்கள் தமிழர்கள். ஆனால் இன்று உருக்குலைந்து அரசியல் அனுதைகளாக வாழ்கிறார்கள். இந்நாட்டு தமிழர்கள். உண்மையான சுதந்திரத்தை யடைய எத்தியாகத்தையும் செய்ய இனித் தயங்கக்கூடாது. அவர்கள் பூரணத்துவ, முழுமையான வாழ்வுபெற தம்மாலான அத்தனையும் செய்ய முன்வர வேண்டும்."

இவ்வாறு சென்றபுதன் கிழமை மாலை நடந்த தமிழர் விடுதலைக் கூட்டணியின் கொழும்புக் கிளை உறுப்பினர்கள் மத்தியில் "தொழிற்சங்க முன்னேற்றத்தில் தமிழரின் பங்கு" என்ற தலைப்பில் உரை நிகழ்த்திய பிரபல தொழிற்சங்க வாதியான திரு. கே.சி. நித்தியானந்தா கூறினார். அவர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:-

"இடதுசாரி இயக்கங்களுடன் நான் பல காலமாக ஈடுபட்டு அத்தொழிற் சங்கங்களை கட்டி எழுப்ப பிரயத்தனப் பட்டேன். இன்று உங்கள் முன்னிலையில் நான் தலை குனிந்த வண்ணம், வெட்கத்துடன்தான் பேசுகிறேன். இந்நாட்டில் நாம் பெரும்பான்மையினரது ஒத்துழைப்புடன்தான் எமது அரசியல், தொழிற்சங்க உரிமைகளைப்பெறமுடியும் என இன்னும் நம்புகிறவர்களுக்கு எனது வாழ்வு ஒரு பாடமாக அமையட்டும். அவர்கள் தமிழனுக்கு ஒரு ("True full life") முழுமையான சுதந்திர வாழ்வை அமைக்க முன்வரட்டும். அரசியல் வரட்டுத் தத்துவங்கள் எங்களை இன்னும் பாதாளத்துக்குத்தான் கொண்டு போய்ச்சேர்க்கும்."

தமிழர்கள் இனி தொழிற் சங்கங்களை தாங்களே உண்டாக்கவேண்டும். அவர்களே அவற்றை ஒற்றுமையுடனும் கட்டுப்பாட்டுடனும் வழி நடாத்தவேண்டும். அரசியலில் தொழிற் சங்கங்கள் ஒரு மூலைக்கல்லாக இருந்து தமிழ் மக்கள் விரும்பும் ஒரு பூரணத்துவ வாழ்வு பெற நாம் பிரயாசைப்பட வேண்டும்.

மலைநாட்டு தொழிலாளர்கள் இடதுசாரி இயக்கங்களில் தொழிற்சங்க ரீதியாக ஈடுபாடு வைத்திருந்ததால்தான் அவர்களுக்கு இத்தனை கொடுமைகள் இழைக்கப்பட்டன. அவர்கள் தொடர்ச்சியாக தங்களது சொந்தத் [illegible] பிக்கை வைத்திருந்தால் நிலை எவ்வளவோ மாறியிருக்கும். இனியும் வெளியில் உள்ளவர்களை நம்பியிராது நீங்களே உங்களை வலுவாக்குங்கள் —

தொழிற் சங்கங்கள் தமிழரது எதிர்கால வாழ்வில் மறுமலர்ச்சி பெற உதவ வேண்டும். எதிர்கால வாழ்வைச் சிருட்டிக்க உங்களது தொழிற்சங்கங்களுக்கு பாரிய கடமையுண்டு என கூறிமுடித்தார்.

தொழிற்சங்க வரலாறு களை 1915ம் ஆண்டுதொடக்கம் விபரித்துக்கொண்டு வந்த திரு. நித்தியானந்தா அவர்கள், தமிழன்தான் இன்றைய தொழிற்சங்க வாதிகளுக்கு தொழிற் சங்கத்தை பிட்டு கற்பித்துக்கொடுத்தவன் என்ற உண்மையை விளக்கினார்;

அவரது முழுப்பேச்சும் ஒரு புத்தக உருவில் வெளிவர இருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர் விடுதலைக் கூட்டணி ஆதரவாளர்கள் மீது

# பொலிசார் வெறித்தாக்கு!

கட்சி கடந்த நிலையில், அரசியல் பற்றற்ற முறையில், சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்ட வேண்டிய பொலிசார் யாழ்ப்பாணத்தில் சில இடங்களில் ஆளுங்கட்சியின் அடி வருடிகளின் தாளத்துக்கு ஆடி, தமிழர் விடுதலைக் கூட்டணியின் ஆதரவாளர்களை அடித்து உதைத்து இம்சித்து, வருவதாகத் தெரியவருகிறது.

குறிப்பாக, தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் நாவலர் அ. அமிர்தலிங்கம் அவர்கள் கைது செய்யப்பட்ட பின்னர், வட்டுக்கோட்டைத் தொகுதியில் பொலிசாரின் அட்டகாசம் அதிகரித்து விட்டதாகத் தெரிய வருகிறது. சிங்கம் இல்லாத இடத்தில் சிறு நரிகள் ஓடி விளையாடுவதுபோல, அமிர்தலிங்கம் அங்கு இல்லாத நிலையில் வட்டுக்கோட்டைத் தொகுதியில் அமைப்பாளர் எனும் சிறு நரிகள் பொலிசாரின் துணையுடன் வெறியாட்டம் நடத்தத் தொடங்கியுள்ளனர்.

## வட்டுக்கோட்டைத் தொகுதியில் காக்கிச் சட்டைக் காலித்தனம்!

சென்ற வாரம், பண்ணாகம், சுழிபுரம், வழக்கம்பரை போன்ற பகுதிகளில் பொலிசார் தமிழர் விடுதலைக் கூட்டணி ஆதரவாளர்களைத் தேடிப்பிடித்து அவர்களை அடித்து உதைத்து துன்புறுத்தினராம். பொலிஸ் ஜீப்பில் ஆளுங்கட்சியின் அடிவருடிகள் இருந்து தமிழ் விடுதலைக் கூட்டணி ஆதவாளர்களை அடையாளம் காட்ட— பொலிசார் அவர்களை வீடு புகுந்து துரத்தித் துரத்திப் பிடித்து, சங்கானைப் பொலிஸ் நிலையம் கொண்டு சென்று நையப்புடைத்தார்கள் என்று கூறப்படுகிறது. "எங்கேயடா உங்கள் அமிர்தலிங்கம், அவரிடம் போய்ச் சொல்லுங்கடா" என்று கூறியபடியே வெறிநாய்கள் போல பொலிசார் குற்றமற்ற இந்தக் கூட்டணி இளைஞர்களை காரணமின்றி அரசியலில் வஞ்சம் தீர்க்கும் நோக்குடன் தாக்கினார்களாம்.

குறிப்பாக கூட்டணி மாநாடு வெற்றிபெறுவதற்காக அல்லும் பகலும் உழைத்த இளைஞர்களே மிகக்கடுமையான தாக்குதலுக்குள்ளானார்கள் என்று தெரிகிறது.

இதன் பின்னர், திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம் இது விஷயத்தை கோப்பாய் பா. உ. திரு. சி. கதிரவேற்பிள்ளையின் கவனத்துக்கு கொண்டு வந்த பின்னர், அவர் உடனடியாக சங்கானை பொலிசாருடன் தொடர்பு கொண்டு இந்த இளைஞர்களை விடுவித்தார்.

வெறிபிடித்து, தமிழர் விடுதலைக் கூட்டணி இளைஞர்களை தாக்கிவரும் பொலிசாருக்கு ஒன்றே ஒன்றை கூறிக்கொள்ள விரும்புகிறோம்—

உங்கள் மிருக வெறியால் அட்டூழியப் போக்கினால்— எங்கள் தமிழ் இளைஞர்களின் குருதியை கொதிக்க வைக்காதீர்கள்; அவர்கள் அஹிம்சையில் வைத்திருக்கும் நம்பிக்கையை சிதறடித்துவிடாதீர்கள்! பூனையும் தாக்கப்படத் தாக்கப்பட ஒரு நாள் புலியாக மாறும் என்பதை மறந்துவிடாதீர்கள். தந்தை செல்வாவின் சுட்டு விரலசைவுக்குக் கட்டுப்பட்டு பூனைகளாக இருக்கும் எங்கள் தமிழர் விடுதலைக்கூட்டணி இளைஞர்களை புலிகளாக நீங்களே மாற்ற முயற்சிக்கிறீர்கள்! உங்கள் நடவடிக்கைகள் எங்கள் இளைஞர்களை புலிகளாக மாற்றிவிட்டால், அதனால் ஏற்படும் விளைவுகளுக்கும் நீங்களே பொறுப்பாளிகளாவீர்கள்!

உங்கள் கடமையை செய்யுங்கள்! ஆனால் ஆளுங்கட்சி அமைப்பாளர்களது அடிவருடிகளாகாதீர்கள்,

காலம் ஒரு நாள் மாறும் இன்று நீங்கள் செய்யும் அட்டூழியங்களுக்கு அன்று பதில் சொல்லியே ஆக வேண்டி வரும்!

இதை காக்கிச்சட்டைக் கூட்டத்தினர் புரிந்துகொள்ளட்டும்!

—காண்டீபம்

## பண்டத்தரிப்பில் பகிஷ்கரிப்பு!

பண்டத்தரிப்பு பகுதியில் விறுவிறுப்புடன் 24ம் திகதி துக்கதினம் கொண்டாடப் பட்டது. பண்டத்தரிப்பு இரு பாடசாலைகளும் வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரியும் மாணவர்கள் இல்லாது வெறிச்சோடிக் கிடந்தது. பண்டத்தரிப்பு பெரிய சந்தையும் பொதுமக்களோ வியாபாரிகளோ இன்றி வெறிச்சோடிக் கிடந்தது. தெரு வீதிகள் எங்கும் "எமது இளைஞர்கள் சிறையில்" "எமது தலைவர்கள் சிறையில்" "நாம் ஏன் வெளியில்?" என்ற முழக்கங்கள் வீதியின் சுவர்களில் எழுதப்பட்டிருந்தன. ஹர்த்தாலை இளைஞர்கள் சில அசம்பாவிதங்கள் மத்தியில் அனுட்டித்தனர்.

## பொலிஸ் நிலையமா? 'பாபர் சலூனா?'

தமிழினத்தின் தானைத் தளபதி அமிர்தலிங்கம் கைதுசெய்யப்பட்டதைத் தொடர்ந்து அவரது தொகுதியைச் சேர்ந்த பண்ணாகம், சுழிபுரம், வழக்கம்பரை, தொல்புரம்போன்ற பகுதிகளிலுள்ள தமிழர் விடுதலைக் கூட்டணி ஆதரவாளர்களான பொதுமக்களை அடித்து, உதைத்து இம்சித்துவரும் சங்கானைப் பொலிசார், இளைஞர்கள் பலரை பொலிஸ் நிலையத்துக்கு கொண்டு சென்று அவர்களது தலைமயிரை வழித்தும், மீசையை சிரைத்தும் அலங்கோலப்படுத்தி அனுப்புகின்றனராம், வேலையின்றி பொலிஸ்காரர்கள் திமிர் பிடித்து, இப்படி அநியாயமாக இளைஞர்களை துன்புறுத்துவது கண்டு மக்கள் கொதிப்படைந்துள்ளனர். 24.5.76 ஹர்த்தாலன்று பஸ் கல் வீச்சுக்கு இலக்காவதைத் தடுப்பதற்காக தானே பஸ்சை ஓட்டிவந்த பொலிஸ் அதிகாரியொருவர், வேலியே பயிரை மேய்ந்ததுபோல — பஸ்ஸுக்குள் வந்த பிரயாணிகளை அடித்து உதைத்து சப்பாத்துக்காலால் மிதித்து துன்புறுத்தியதாகவும் தெரியவருகிறது. இங்கு 30 இளைஞர்கள் கைதுசெய்யப்பட்டு பதினன்கு நாள் தடுப்புக்காவலில வைக்கப்பட்டுள்ளனர்.

## மாங்குளத்தில் பூரண பகிஷ்கரிப்பு

தமிழர் விடுதலைக் கூட்டணிச்செயலாளர் நாயகம் திரு. அ. அமிர்தலிங்கத்தையும், ஏனைய கூட்டணி பா. உ.க்கள் கைது செய்யப்பட்டதையும் எதிர்த்து தமிழ்ப் பகுதிகள் முழுவதும் 24-5-76 பகிஷ்கரிப்பு நடாத்தப்பட்ட போது மாங்குளத்திலும் பூரண பகிஷ்கரிப்பு நடைபெற்றது, சுமார் 250பிள்ளைகள் வரையில் கல்வி பயிலும் தமிழ்க் கலவன் மகாவித்தியாலயத்திற்கு ஐந்து பிள்ளைகள் வரையிலேயே சென்றிருந்தனர். வர்த்தக நிலையங்கள் யாவும் அடைக்கப்பட்டு பூரண ஒத்துழைப்பை நல்கினர். மாங்குளத்தின் அயற்கிராமங்களான, ஒலுமடு, பனிக்கன் குளம், போன்ற இடங்களில் எல்லாம் வர்த்தக நிலையங்கள் மூடப்பட்டு பாடசாலைகள் வெறிச்சோடிக் கிடந்தன. குடியரசு தினத்திற்கு முந்தியதினமான 21ம் திகதியும் மாங்குளத்திலும் ஏனைய அயற் கிராமங்களிலும் பூரணபாடசாலைப் பகிஷ்கரிப்பு நடைபெற்றது. தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்கள் கைதானதை எதிர்த்து மாங்குளத்தின் பல பகுதிகளிலும் சுவர்களில் சுலோகங்கள் எழுதப்பட்டிருந்தன.

## வேம்படி மாணவிகளின் தன்மான முடிவு!

யாழ் நகரில் நடைபெற்ற நான்காவது அனைத்துலகத் தமிழாராய்ச்சி மாநாட்டில் மரித்த தமிழர்களது நினைவாக நிறுவப்பட்ட நினைவுச் சின்னம் இனந்தெரியாதவர்களால் தகர்க்கப்பட்டபோது அதே இடத்தில் நினைவுச் சின்னத்தைத் தமிழ் இளைஞர் மீண்டும் நிறுவினார்கள்.

திரும்ப நிறுவப்பட்ட நினைவுச்சின்னமும் நள்ளிரவில் தகர்க்கப்பட்டது. அப்படித் தகர்க்கப்பட வேண்டுமென்று கட்டளை பிறப்பித்தவர் யாழ். அரசாங்க அதிபர்தான் என்பது தமிழ் மக்களின் ஏகோபித்த அபிப்பிராயமாகும்.

மேற்படி சிதைப்பு வேலையில் இறங்கி தமிழ் மக்களின் மனதைப் புண்படுத்தியும், இறந்த தமிழ் ஆத்மாக்களை அவமதித்த அரசாங்க அதிபரைப் பிரதம அதிதியாக அழைக்கும் எந்தவொரு வைபவத்திலும் கலந்துகொள்ளுவதில்லையென்றும், அப்படிப்பட்ட வைபவங்களைப் பகிஷ்கரிப்பதென்றும் வடபகுதி மாணவ மாணவிகள் முடிவெடுத்துள்ளனர்.

கடந்த வருடம் வேம்படி மகளிர் கல்லூரி விளையாட்டுப் போட்டிக்கு வட மாவட்ட அரசியல் அதிகாரி திரு. கி. அருளம்பலம் பிரதம அதிதியாக அழைக்கப்பட்டதை ஆட்சேபித்து வேம்படி மாணவிகள் கொதித்தெழுந்ததும் வைபவத்தைப் பகிஷ்கரிக்கப் போவதாக அறை கூவல் விடுத்ததும், இறுதியில்வேம்படி மகளிர் கல்லூரி அதிபர் மாணவிகளது அறை கூவலுக்குப் பணிந்து விளையாட்டுப்போட்டியையே இரத்துச்செய்ததும் தெரிந்ததே. அதே அரசியல் அதிகாரி சனகரத்தினம் மத்திய மகா வித்தியாலய இரவு விருந்தில் கலந்துகொண்டபோது சந்தனமுட்டி அபிஷேகம் செய்யப்பட்டது வரலாற்று உண்மை.

கல்லூரி விளையாட்டுப் போட்டிகள் வைபவங்கள் சிறப்புற நடைபெறவேண்டுமேல்—அரசியல் பிரச்சினைக்குரியவர்களை பாடசாலை அதிபர்கள் அப்படிப்பட்ட வைபவங்களுக்கு அழையாது இருக்கவேண்டும். அல்லாவிடில் வை[illegible]களுக்கு அழைத்த அவர்களை அவமரியாதைக்குட்படுத்தும் நிகழ்ச்சிகள் நடைபெறுவதற்கு அதிபர்களே பொறுப்பேற்க வேண்டுமென மாணவர் தரப்பில் கூறப்படுகிறது.

## திருமலையில் கறுப்புக்கொடிகளை பொலிசார் அகற்றினர்!

தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்கள் கைது செய்யப்பட்டதற்கு ஆட்சேபனை தெரிவித்து 23-5-76ல் நடைபெற்ற ஹர்த்தாலின் போது திருகோணமலையில் பல இடங்களில் கறுப்புக் கொடிகள் ஏற்றப்பட்டிருந்தன. அவற்றைப் பொலிசார் அகற்றினர். தென்னை மரங்களில் உதயசூரியன் கொடிகள் உயரமான இடத்தில் கட்டப்பட்டிருந்தன. பிரபல கல்லூரிகளுக்கு மாணவர்கள் எவரும் செல்லவில்லை. கடைகள் இழுத்து மூடப்பட்டிருந்[தன].

## அக்கரைப்பற்றில் பூரண வெற்றி

குடியரசு தினத்துக்கு முதல் நாளான 21ம் திகதி அக்கரைப்பற்று தமிழ் இளைஞர் பேரவையினர் எடுத்துக்கொண்ட முயற்சியின் காரணமாக அக்கரைப் பற்றுப்பகுதியிலுள்ள சகல பாடசாலைகளும் வெறிச்சோடிக்கிடந்ததுடன் ஆசிரியர்கள் ஒன்றுசேர்ந்து அரட்டையடித்துக் கொண்டிருந்தனர். இப்பகுதியைச் சேர்ந்த ஆலையடிவேம்பு, கோளாவில், பனங்காடு ஆகிய இடங்களிலும் பாடசாலைகள் வெறிச்சோடிக் கிடந்தன. மே 24ந் திகதி அதிகாலையிலிருந்தே கறுப்புக்கொடிகள் சந்திகளிலும் தனிப்பட்ட ஒவ்வொரு வரது இல்லங்களிலும் பறந்து கொண்டிருந்தன. தெருக்களில் உதயசூரியன் கொடிகளுடன் இளைஞர்கள் உலாவிக்கொண்டிருந்தனர். தெருச் சுவர்களிலும் சந்திகளிலும் "எங்களண்ணன்மாரும் சகோதரர்களும் சிறையில் வாட, இங்கென்ன கொண்டாட்டம்," "வட்டுக்கோட்டையில் எங்கள் இலட்சியத்தைப்பிரகடனம் செய்துவிட்டோம், என்பன போன்ற சுலோகங்கள் காணப்பட்டன;

## சிரியுங்கள்!

"வடக்கு, கிழக்கு மாகாணங்களில் வாழும் தமிழ் மக்கள் தனிநாட்டுக்கோரிக்கையை மூர்த்தண்யமாக எதிர்க்கிறார்கள். அவர்கள் அரசாங்கத்தையே ஆதரித்து நிற்கிறார்கள்!"

—பிரதமர் ஸ்ரீமா பண்டாரநாயக்கா
(டெயிலி நியூஸ் 24-5-76)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைமைத் தபால நிலையத்தில் செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது.

## நிழல் நாடகம்

இளைஞன்—அகிம்சை, சாத்வீகம் இது எல்லாம் இந்தக் காலத்துக்கு—அதுவும் நமது நாட்டிற்கு சரிப்பட்டு வராது. அம்மையார் சொல்லியிருக்கிறு அரசாங்கத்தின் பொறுமையை நாங்கள் பலஹீனமாய் கருதுவதாக—ஆனல் நான் சொல்லுறன் எங்களின் பொறுமையைத்தான் அரசாங்கம் பலஹீனமாய் நினைக்குது.

முதியவர்—அதுசரி தம்பி, யார் எப்படியிருந்தாலும் எங்களுடைய துணிவிலும், வீரத்திலும் எங்களுக்கு நம்பிக்கையிருக்குமட்டும் நாம் ஏன் அடுத்தவர் அபிப்பிராயத்தைப் பற்றிக் கவலைப் படவேண்டும்.

இளைஞன்— அபிப்பிராயம் இருக்கட்டுமய்யா. அரசாங்கத்தினுடையவும் அடிவருடிகளுடையவும் அடாவட்டித்தனங்களுக்கு ஒரு அளவு வேண்டாமா? இவர்களுடைய அடக்குமுறையையும் - சர்வாதிகாரத்தையும் எத்தனை நாளைக்குத்தான் நாங்கள் பொறுப்பது. எங்களின் இளைஞர்களைத்தான் சிறைக்குள்ளே வைத்தார்கள்—அடித்து நொறுக்கின்றுர்கள் என்றுல் இப்பொழுது தலைவர்களிலேயுமல்லவா கைவைத்து விட்டார்கள்.

முதியவர்—அதைத்தானே தம்பி நாம் எங்களுடைய விடுதலைப் போராட்டமாகக் கருதுகிறோம் — தலைவர்களை ஒன்றிரண்டு பேரையல்ல முழுத்தலைவர்களையும்— அவர்களைத் தொடர்ந்து ஆயிரமாயிரம் தொண்டர்களையும் கைதுசெய்யவேண்டும், எம் தமிழ்ப்படையால் சிறைக்கூடங்கள் நிரம்பி வழியவேண்டும் — சிறைச்சாலையைப் பூஞ்சோலையாகக் கண்டு மகிழும் எம்மவர்களின்—வீரத்தையும், விடுதலை உணர்ச்சியையும் — கண்டு அரசு அஞ்சவேண்டும். இத்தகைய அறப்போராட்டத்தை அகிலமறியச்செய்யவேண்டும், அதன் மூலம் உலக நாடுகளின் கண்டனங்களுக்கு அஞ்சி சிங்கள அரசு எமக்குச் சுதந்திரத்தைத் தரவேண்டும் என்பதுதானே தம்பி எமது இலட்சியம்—நோக்கம். காந்தியும், அறிஞர் அண்ணாவும் நடத்திய உரிமைப்போராட்டங்கள் எல்லாம் இப்படித் தானே நடந்தன.

இளைஞன்—அது ஒருகாலம் சத்தித்திற்கு அஞ்சிச் சமரசம் செய்து கொள்வார்கள் என்று இனியும் நாம் எதிர் பார்க்க முடியாது.

முதியவர்—ஏன் முடியாது சத்தியமும், சத்தியத்திற்காக நடத்தும் போராட்டமும் என்றும் தோற்றதாக வரலாறு கிடையாது—மகாபாரதப் போர் முதல் மகாத்மா வரைக்கும் சத்தியம் தோற்றதில்லை—எனவே நாம் சத்தியப் போராட்டம் நடத்துவோம் — அதனுல் மறப்போர் புரிவதற்கு மனத்துணிவு அற்றவர்கள் என்று பொருளல்ல — தலைவர்கள் காட்டுகின்ற வழி தான் எமது வழியாக இருக்க வேண்டும். ஆகையால் நீயும் உன்னைப் போன்ற இளைஞர்களும் பொறுமையைக் கடைப்பிடிக்க வேண்டும்.

இளைஞன் — அப்படியென்றுல் கைதான எமது தலைவர்களின் நிலைதான் என்ன?

முதியவர் — அவர்களின் நிலையைப்பற்றி ஆராயுமுன்பு — அவசரப்பட்டுக் கைது செய்த அம்மையார் ஆட்சி எமது அகிம்சா வீரத்தைக் கண்டு கதிகலங்கிக் கொண்டிருக்கிறது. என்ன செய்வோம் என்று திகைக்கிறது—அவர்களைக் கைது செய்ததின் மூலம் தமிழர் விடுதலைக் கூட்டணிக்கும் போராட்டத்திற்கும் தாங்களாகவே வலிமையூட்டி விட்டார்கள்— மூஞ்சூறைப் பிடித்த சாரைமாதிரி இவர்களை அடைத்து வைத்தாலும் ஆபத்து—விடுதலை செய்வதாலும் ஆபத்து, என்ன செய்வது என்று கலங்கிக் கொண்டிருகிருர்கள்...

— அற்லஸ்

## ஏப்பமா?

கொழும்பில் நடைபெற்ற அரசாங்கக்கட்சியின் மே நாள் ஊர்வலத்தில் கலந்து கொள்வதற்காக கிளிநொச்சித் தொகுதியிலுள்ள பிரபல தொழிற்சாலையொன்றில் கடமையாற்றும் சுமார் 50க்கு மேற்பட்ட ஊழியர்களிடமிருந்து ஆளுக்கு ரூபா பத்து வீதம் ரூபா 500-00 வசூலிக்கப்பட்டதாம். இதில் ரூபா 250-00 மட்டுமே கொழும்பு செல்வதற்கு பஸ் கட்டணமாக செலுத்தப் பட்டதாம். மீதி ரூபா 250-00ம் எங்கே? ஆளுங் கட்சி அடிவருடிகளினுல் ஏப்பம் விடப்பட்டு விட்டதா? என்று கேட்கிருர்கள பணம் கொடுத்த ஊழியர்கள்.

## வடலியடைப்பில் கைதான இளைஞர்கள்!

பண்ணகம், வழக்கம்பரை ஆலயவீதியில் வைத்து, க. தெய்வேந்திரம், செ. வயிரவநாதன், செ, தெட்சணமூர்த்தி ஆகிய இளைஞர்கள் பொலிசாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர் இதற்கு முன் வடலியடைப்பைச் சேர்ந்த அ. வதனமோகனராசா, ப. ஜெயக்குமாரன், து. யோகேஸ்வரன், அ. சிவசுந்தரம்ஆகிய 4 இளைஞர்கள் கைதுசெய்யப்பட்டு விடுதலைசெய்யப் பட்டனர்.

திரு. அமிர்தலிங்கம் கைதுசெய்யப்பட்ட பின்னர், அவரது தொகுதியிலுள்ள கூட்டணி ஆதரவாளர்கள் சொல்லொணுப் பொலிஸ் கொடுமைகளுக்கு உள்ளாக்கப்பட்டுவருகிருர்கள்.


## 4-வது வெற்றி வாரம்!

**செல்லமகால்**

சுஜாதா, கமலஹாசன், விஜயகுமார், லீலாவதி, ஸ்ரீபிரியா, தேவகி மற்றும் பலர் நடித்தது

**ஜனுதிபதி விருது பெற்ற**

**'அவள் ஒரு தொடர் கதை'**

திரைக் கதை—வசனம்
டைரக்ஷன்— கே. பாலச்சந்தர் B.Sc.

தயாரிப்பு:- இராம அரங்கண்ணல்

## 3-வது ஜனத்திரள் வாரம்

**கெபிட்டி**

ஜெமினி-தேவிகா, முத்துராமன் ரங்கராவ், ரி. எஸ். பாலையா

நடித்த

**வாழ்க்கைப் படகு**

## 4வது வெற்றி வாரம்

**கெப்பிட்டல்—பிளாசா**

நடிகர் திலகம் சிவாஜி (இரட்டை வேடம்) உஷா, நந்தினி, மேஜர் சுந்தரராஜன், நாகேஷ், பண்டரிபாய், வி. கே. ராமசாமி, ரமா பிரபா, நடித்த—

**கௌரவம்**

(ஈஸ்ட்மென் கலர்)

## லிடோ (யாழ் நகர்) 3-வது வாரம்

சிவாஜி, ஜெயலலிதா, விஜயகுமார், சுந்தரராஜன் —நடித்த

**அன்பைத்தேடி**

(ஈஸ்ட்மன் கலர்)

## கிங்ஸ்லி 12வது வாரம்

சிவகுமார் கமலஹாசன் ஜெயசுதா —நடித்த

**மேல்நாட்டு மருமகள்**

(கலர்)

## வெலிங்டன் 5 வது வாரம்

—யாழ்நகர்

சீர்காழி கோவிந்தராஜன். டி. ஆர். மகாலிங்கம் நடித்த-

**அகத்தியர்**

(கலர்)


இப்பத்திரிகை சிலோன் நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட் [illegible] பண்டாரநாயக்க வீதி, 194 ஏ, இலக்கத்தில் 1976ம் வருடம் மே மாதம் 30-ந் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டு பிரசுரிக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org